15வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
☎ 416-282-8059 | 416-282-4978


வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு
அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 22 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2005


2006 இல் வீட்டின் விலை? 06


சொல் வன்மை 09


தொலைந்து போன பெஞ்சமின் 11

# தமிழ் மக்களின் முடிவு என்ன?

இன்னமும் இரண்டே இரண்டு நாட்களே இலங்கை ஜனாதிபதி தேர்தலுக்கு இருக்கின்றன. வடக்கு கிழக்கில் வாழ்கின்ற இலங்கைத் தமிழ் மக்கள் என்ன முடிவு செய்யப்போகின்றார்கள் என்பது ஒரு பெரும் கேள்விக் குறியாகவே உள்ளது.

தமிழ் மக்களின் முடிவு என்ன? என்பதை அறிய இலங்கை மக்கள் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் அக்கறை கொண்ட நாடுகள் எல்லாமே மிக்க ஆர்வமாக எதிர்பார்த்துள்ளன.

இலங்கை ஜனாதிபதியாய் யார் வந்தாலும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை உடனடியாகத் தீராது என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, வந்து போன, இனி வரப்போகின்ற இலங்கை ஜனாதிபதிகள் எல்லாருக்குமே தெரியும். அதே சமயம் இந்த ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்கப் போகின்றனரா? இல்லையா என்று வெகு ஆர்வமாக உலகம் அவதானித்து வருக்கின்றது.

'சிறிலங்கா அரசுத் தலைவர் தேர்தலில் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர்கள் அக்கறை காட்ட வேண்டியதில்லை' என்று, கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுடனான சந்திப்பின் பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அறிவித்துள்ளார்.

'தமிழ் மக்கள் வாக்களிக்க விரும்பினால் நீங்கள் தடுப்பீர்களா?' என்று சம்பந்தனிடம் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்.

'தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை பறிக்க மாட்டோம்' என்று ஜனநாயகவாதியாக சம்பந்தன் பதில் கூறினார். மேலும் அவர் பேசும் போது 'ஆனால் அனுபவங்களின் அடிப்படையில் நிச்சயமாக தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் பங்கு கொள்ள மாட்டார்கள்' என்ற தனது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

இத்தருணத்தில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க வேண்டிய வாக்காளர் அட்டைகள் எல்லாம் இனம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு விட்டது என்று ஒரு செய்தி வந்துள்ளது. வாக்காளர் அட்டை இல்லாமல் வாக்களிக்க முடியாது.

இது ஒரு புறம் இருக்க, யாழ். குடாநாட்டில் சிறீலங்கா தலைவர் தேர்தலை, அரசு ஊழியர்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'மக்கள் படை' என்ற பெயரில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

திருகோணமலை, அம்பாறை தமிழ் மாணவர் பேரவையும் இந்தத் தேர்தலை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க 'இந்த ஜனாபதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையை முறையாக பயன்படுத்த வேண்டும்' என்று வடகிழக்கு கத்தோலிக்க ஆயர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

## உலகில் மிகவும் சக்தி வாய்ந்த முதல் நூறு பெண்கள்

அமெரிக்காவின் பிரபல்யம் வாய்ந்த Forbes சஞ்சிகை தற்போது உலகின் மிகவும் சக்தி வாய்ந்த முதல்நூறு பெண்களை தெரிவு செய்து வெளியிட்டுள்ளது. இச்சஞ்சிகை இப்பெண்கள் உலகில் சம்பவங்களை நடத்திக் காண்பிப்பவர்கள் என்று கூறுகிறது. இவர்களைத் தெரிவு செய்ய பின்வரும் விடயங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்கிறது Forbes.

1. பலராலும் அறியப்பட்டவர்கள். இவர்களைப் பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வந்துள்ளன.
2. பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள்.
3. இவர்கள் வகிக்கும் பதவி.
4. இவர்களது தன்அறிமுகக்கையேடு (Resume)

இவர்களில் முதலாவது இடத்தைப் பெற்றவர் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் பதவி வகிக்கும் கொண்டலிரா றைஸ் (Condoleezza Rice) ஆவர்.
இரண்டாம் இடத்தைச் சீன நாட்டின் சுகாதார அமைச்சரும் உதவி பிரதமருமான Wu yi உம் மூன்றாம் இடத்தை உக்கிரேன் (Ukraine) நாட்டின் முன்னாள் பிரதம மந்திரியான Tymoshenko Yulia உம் பிடித்திருக்கிறார்கள். Oprah winfrey ஒன்பதாவது இடத்தை பெற்றுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இருபத்தி ஐந்தாவது இடத்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

Hilary Rodham Clinton இருபத்தி ஆறாவது இடத்தையும் இங்கிலாந்தின் மகாராணி Queen Elizabeth எழுபத்தி ஐந்தாவது இடத்தையும் பெற்றார்கள்.

தொடர்ச்சி 12ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business


416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# "தொடரும் கடன் சரித்திரம்"

பழுதான கடன் சரிதத்தை எப்படிச் சரி செய்யலாம் என்று பலரும் கேட்கிறார்கள். கடன் சரிதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயம் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் பல சந்தர்பங்களில் ஆறு வருடங்களுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஆறு வருடங்களுக்கு பிறகு பழைய விடயங்கள் கடன் சரிதத்தைப் பராமரிக்கும் நிறுவனத்தால் தானாவே நீக்கப்பட்டு விடுகின்றது. கடந்த மூன்று அல்லது நான்கு வருடங்களில் உங்கள் கடன் பழுதாயிருந்தால் வங்கிகளிலிருந்தோ, மற்ற நிதி நிறுவனங்களிலிருந்தோ கடன் பெறுதல் என்பது ஏறத்தாழ இல்லாத காரியம்



என்றே சொல்லி விடலாம். கடன் சரிதத்தைப் பராமரிக்கும் நிறுவனமும் உங்களின் இப்போதைய நிலைமை நன்றாக இருந்தாலும் அதை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அவர்கள் பார்ப்பதெல்லாம், உங்களின் கடந்த காலத்தில் நீங்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையே. கடனை ரிப்பேர் செய்கிறேன் என்று சொல்லும் நிறுவனங்களிடமும், தனிநபர்களிடமும் பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருப்பது புத்திசாலித்தனம். கடன் வாங்கியிருக்கும் மாணவர்கள் சிலர், கடனை ஒழுங்காகத் தவணைப் படி கட்டாமல் கடன் சரிதத்தை பழுதாக்கிக் கொள்கிறார்கள். பின்விளைவுகள் தெரியாமல், தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் கெடுதல் இது ஆகும். இது போன்ற சமயங்களிலும், நல்ல கடன் சரிதத்தை உருவாக்க, பழைய கடன்களைக் கட்டுவதோடு, சில வருடங்கள் காத்திருக்க வேண்டியும் வரும். ஆரம்பத்திலிருந்தே கவனத்தோடு செயல் பட்டால் இத்தகைய பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

## வாழ்வில் வெற்றி பெற

கடன் மதிப்பெண் அல்லது கிரிடிட் ஸ்கோர் என்றால் என்ன?

ஆசிரியர் மாணவனுக்கு மதிப்பெண் போடுவதைப் போல, உங்களின் கடன் சரிதத்துக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பெண் கடன் மதிப்பெண் அல்லது கிரிடிட்ஸ்கோர். கடன சரிதத்தைப் பராமரிக்கும் எக்யுபாக்ஸ், டிரானிஸ் யூனியன் போன்றவையும் இம்மதிப்பெண்ணைத் தரும். இதை FICO ஸ்கோர் என்றும் சொல்வார்கள். FICO என்பது Fair Isaac & Company என்பதன் சுருக்கம். இந்த மதிப்பெண் அல்லது ஸ்கோர் நிறுவனத்துக்கு நிறுவனம் மாறுபடும். உதாரணமாக எக்யுபாக்ஸ் ஸ்கோரும், டிரான்ஸ் யூனியன் ஸ்கோரும் ஒரே மாதிரியாக இருக்காது. சற்றே வித்தியாசப்படும். வங்கிகளும் தம்முடைய வாடிக்கையாளர்களுக்கு இத்தகைய மதிப்பெண்ணைத் தருகின்றன. சில வங்கிகள் இந்த மதிப்பெண்ணை ஒன்றிலிருந்து நூறுவரை வைத்திருக்கக் கூடும். கூடிய மதிப்பெண் குறைந்த வட்டியைப் பெற்றுத் தரும். குறைந்த மதிப்பெண் கூடுதல் வட்டி கட்டுவதில் முடியும். சில வங்கிகள் வாடிக்கையாளர்களை A, B, C, D, E என்று தரம் பிரித்திருக்கும். A வாடிக்கையாளருக்கு குறைந்த வட்டியில் கடன் தர வங்கி தயாராக இருக்கும். E வாடிக்கையாளர் என்ன வட்டி தரமுன் வந்தாலும் கடன் தர வங்கி தயாராக இருக்காது. FICO ஸ்கோரின் அதிகபட்ச எண் 900 ஆகும். இப்போது ஒருவர் வீட்டுக்கடன் அல்லது மோட்கேஜ்க்கு விண்ணப்பிக்கிறார் என்று வைத்துக் கொள்வோமே. அப்போது வங்கிகள் இந்த FICO ஸ்கோரைக் குறிப்பாகப் பார்க்கின்றன. 680 அல்லது 700 க்கு மேல் ஸ்கோர் இருந்தால் நல்ல அனுகூலமான வட்டியில் கடன் கிடைக்கும். இல்லையேல் ஸ்கோரைப் பொறுத்து கஷ்டத்தின் அளவு அதிகரிக்கும்.

இந்த ஸ்கோருக்கும், கடன் கட்டத்தவறியவர்களுக்கும் உள்ள சம்மந்தம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்கோர் 800 என்றால் கடன் பெற்ற 5000 பேரில் ஒருவர் தான் கடன் கட்டத் தவறியிருக்கிறார். மற்ற ஸ்கோர்களுக்கும், இதே போல கடன் கட்டத் தவறியவர்களின் விவரத்கை கீழே பார்போம்.

| | | |
|---|---|---|
| 780 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 576க்கு 1 |
| 700 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 288க்கு 1 |
| 680 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 144க்கு 1 |
| 660 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 72க்கு 1 |
| 645 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 36க்கு 1 |
| 630 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 18க்கு 1 |
| 615 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 9க்கு 1 |
| 600 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 4.5க்கு 1 |
| 595 | என்றால் தவறுதல் எண்ணிக்கை | 2.25க்கு 1 |

இப்போது புரிகிறதா வீட்டுக்கடன் கொடுப்பவர்கள் இந்த ஸ்கோருக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று. வடஅமெரிக்காவில் எல்லாமே புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டுதான் செயல் படுத்தப்படுகின்றது. இதற்கு கடன் சரிதமும் விலக்கல்ல. எந்தெந்த காரணங்களினால் ஸ்கோர் குறைகின்றது? சிலகாரங்களை இங்கு பார்ப்போம்.

- கட்டத் தவறிய கடன்கள்
- தவணை கடந்த கடன்கள்
- அதிகபட்சத்திலேயே எப்போதும் இருக்கும் கடன்.
- லிமிட்டுக்கு மேல் இருக்கும் கடன்.
- அளவுக்கு அதிகமான கடன் விசாரணைகள்.
- ஏராளமான கடன்கள்.
- கலைக்கஷன், திவால் அல்லது வரிகளை

பெரி. முத்துராமன்

ஒழுங்காகக் கட்டாதிருத்தல் போன்றவை.


உயர்ந்த மதிப்பெண் பெற குறிப்பாக ஐந்து யோசனைகளைக் கூறலாம்.

1. உரிய தவணை தேதிக்கு முன்னதாக பில் மற்றும் கடன் தவணைகளைக் கட்டி வாருங்கள். தாமதம் வேண்டாம்.
2. குறைந்தது பதினெட்டு அல்லது இருபத்து நான்கு மாதங்களுக்கு ஒருமுறை உங்கள் கடன் சரிதத்தைப் பெற்று சரிபாருங்கள். தவறு இருக்கும் பட்சத்தில் திருத்துவதற்கு சம்மந்தப் பட்ட நிறுவனத்துடன் தகுந்த ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
3. உங்கள் கிரிடிட் கார்டுகளை அதிகபட்சம 65 சதவீதமே உபயோகப்படுத்துங்கள். உங்கள் கிரிடிட்கார்ட் லிமிட் 1000 டொலர் என்றால் சாதாரணமாக 650 டொலருக்கு மேல் உபயோகப்படுத்தாதீர்கள். அதிகபட்சம் இரண்டுக்கு மேல் கிரிடிட் கார்டுகளை உபயோகப்படுத்தாதீர்கள்.
4. அதிகப்படியான கடன் விண்ணப்பங்களையும் விசாரணைகளையும் தவிருங்கள்.
5. தகுந்த காலம் எல்லாவற்றிற்கும் தேவை. அதாவது தொடர்ந்து நீண்ட காலத்துக்கு ஒழுங்கான முறையில் கடன்களைக் கட்டி வரும் போது ஸ்கோர் தானாகவே உயரக் காணலாம்.



# தமிழ் மக்களின் முடிவு என்ன?

1 ஆம் பக்கத் தொடர்ச்சி



ஜனாதிபதி வேட்பாளரான ரணில் 'மீண்டும் ஒரு யுத்தம் மூள இனி ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை' என்று கொழும்பு பத்திரிகை 'தினக்குரலுக்கு' பேட்டி அளிக்கும் போது குறிப்பிட்டுள்ளார்.

மாற்று வேட்பாளரான மகிந்த ராஜபக்ச 'விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியானது அல்ல. நான் ஜனாதிபதி ஆகியதும் அதை மறு பரிசீலனை செய்வேன்' என்று கூறுகின்றார்.

இதே சமயம் சிங்களப்பத்திரிகைகளில் வந்த ரணிலின் விளம்பரம் என்ன கூறுகின்றது என்பதைப்பார்ப்போமா.

நாட்டை பிரிக்காமல் இருக்கப் போராடிய உங்களுக்கு (இராணுவத்திற்கு)

ஒரு அமைச்சு!<br>
உங்களுக்கு ஒரு வீடு!<br>
உங்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்!

என்று தமிழ் மக்களை கொன்று குவித்தவர்களின் மீதான கருணை மழை பெய்போ பெய் என்று பெய்கின்றது. இந்த மழை பெய்யவே போவதில்லை என்பது எமக்குத் தெரியும். சாதாரண மக்களுக்குத் தெரியுமா? இது போகட்டும்.

மகிந்த ராஜபக்சவின் விளம்பரத்தில் என்ன, இனவாதம் இல்லாமலா?



அடுத்த ஜனாதிபதி

ரனில் பிரபாகரனா?

ரனில் சந்திரசேகரனா?

ரனில் தொண்டமானா?

என்று கேள்வி கேட்டு, தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை அள்ளி எறிகின்றது.

இந்த நிலைமைகள் இவ்வாறு இருந்தாலும் தமிழ் மக்களின் வாக்குகள் இந்தத் தேர்தலில் முக்கியமானது.

ஆனால், எல்லா அதிகாரங்களையும், அறிவித்தலையும் மீறி அவர்கள் வாக்களிக்களிக்கப் போகின்றார்களா? இல்லையா?

அவர்கள் வாக்களித்தாலும், யாருக்கு வாக்களிப்பார்கள்?

இந்தக் கேள்விகளுக்குப் பதில்கள் எல்லாம் தேர்தலுக்கு பின்னர்தான் கிடைக்கும்.

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# வானத்தைப் பிளந்த கதை!

அம்மா என்னைத் தேடாதே!

கோடை வெய்யில் யாழ்ப்பாணத்தைக் கொளுத்தி எரித்துக் கொண்டிருந்தது. அந்த நாள் நான் வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டேன்.

ஓடிப்போய்விட்டேன் என்றதும் வேலி, மதில், மதவு, கதவு, வாய்க்கால் பாய்ந்து ஓடிப்போனேன் என்று நினைத்து விடாதீர்கள். அல்லது அப்பாவின் முரட்டுத்தனமான அடியை இடது கையால் தடுத்து நிறுத்தி விட்டு கல்லுப்போடாத செம்மண் வீதியில் விழுந்து, எழும்பி ஓடிப்போனேன் என்றும் கற்பனை செய்யாதீர்கள். சைக்கிளில் ஏறி வெகு நிதானமாகவே ஓடிப்போய்விட்டேன்.

ஏற்கனவே திட்டமிட்டபடியே வெகு கச்சிதமாக இந்த ஓடிப்போதல் நடந்தது. இந்த திட்டம் திடீரென்று போட்ட திட்டம் ஒன்றும் கிடையாது. இது சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்பே அங்குலம் அங்குலமாகத் திட்டமிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவமான நிகழ்சி.

இதை யாருமே தடுத்து நிறுத்தவில்லை. தடுத்து நிறுத்துவதற்கு யாருமே வீட்டில் இருக்கவில்லை. இருந்திருந்தாலும் தடுத்திருக்க முடியாது. ஆனால் வழி அனுப்புவதற்கு ஓர் உயிர் இருந்தது.

அது எங்கள் வீட்டு நாய். எங்கள் வீட்டில் இருந்த எல்லா உயிர்களின் மீதும் எந்த வேறுபாடும் இல்லாமல் அன்பு செலுத்திய ஒரு ஜீவன் இது. என்னில் அதற்கு ஒரு விசேட அன்பு இருந்திருக்கலாம் என்றும் இப்போது தோன்றுகின்றது..

'நாய்களின் கண்களுக்கு எருமை வாகனத்தில் ந்திறங்கும் யமராசனைத் தெரியும்'. ஆச்சி அடிக்கடி இப்படிச் சொல்லுவாள்.

அதே போல இந்த நாயின் உள்ளத்துக்கு, இவன் வீட்டை விட்டு ஓடிப்போகின்றான் என்ற உள்ளுணர்வு ஏற்பட்டதோ என்னவோ? வாசலையும் தாண்டி தெரு முனை வரை சைக்கிளின் பின்னாலேயே ஓடி வந்து நின்று அழுதது. அதன் கண்களில் இருந்து எனது உருவம் மறையும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்தது.

1981ம் ஆண்டு இது நடந்தது. உங்களுடைய வரலாற்றுக்கு இது முக்கியத்துவமானதாக இல்லாமல் போகலாம். ஆனால் சமயத்தில் உங்களுடைய வரலாற்றுக்கு இது பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தி இருக்க முடியும். அப்படி இருப்பதற்குரிய எல்லா சாத்தியமும் இந்த ஓடிப்போதலுக்கு உண்டு.

'ஓடிப்போதல்' என்ற சொல்லுக்கும் யாழ்ப்பாணத்து மரபுக்கும் ஒரே ஒரு அர்த்தம் தான் அந்தக் காலத்தில் இருந்தது. 'யாரையோ ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடிப்போய்விட்டான்' என்பது தான் அதன் அர்த்தம்.

அப்படி நடந்திருந்தால் எவ்வளவோ சௌகர-யமாக இருந்திருக்கும். உங்களுக்கும், எனக்கும் மட்டுமல்ல அதிகாரத்தில் இருந்த, இன்னமும் இருக்கின்ற பலருக்கும் மிகவும் சௌகரியமாக இருந்திருக்கும்.

எல்லாருடைய துரதிஸ்டமும். அச்சமயம் என்னோடு ஓடி வர எந்த ஓர் இளம் பெண்ணும் தயாராக இல்லை (இப்போதும் தான்). அதனால் நான் தனியாகவே ஓடிப்போனேன்.

எவ்வளவு தூரம் ஓடிப்போயிருப்பேன்.?

ஒரு ஐம்பது மைல் தூரம் இருக்கும்.

அடப்பாவி இவ்வளவுதானா? இதற்குப் போய் இவ்வளவு நீள, அகலமாக அலட்டிக் கொள்வதா?

நாம் எவ்வளவு தூரம் ஓடிப்போகின்றோம் என்பது முக்கியமில்லை. ஏன் ஓடிப்போகின்றோம் என்பது தான் முக்கியம்.

நீங்கள் ஐம்பது மைல் ஓடிப்போயிருந்தால் வவுனியா வரை போயிருப்பீர்கள். நான் ஓடிய நோக்கத்தில் ஐம்பது மைல் தொலைவில் வந்ததோ இராமேஸ்வரம். அது இந்தியா என்ற இன்னோரு நாட்டில் இருக்கிறது என விவரமாகச் இனிச் சொல்லவேண்டியதில்லை.

ஓடி என்று போய்விட்டால் அதற்கும் பிறகு அடுத்தடுத்து எத்தனையோ விடயங்கள் நடக்கும். ஓடிப்போன சிலருக்கு பிறகு என்ன நடந்தது என்று தெரியாமலே போயிருக்கின்றது. அப்படி இருந்து விடக்கூடாது என்பதற்காக சிலர் கடிதம் எழுதுவார்கள். இது அவர்களின் கடைசியும் முதலுமான கடிதமாய் இருக்கும். கடிதத்தில் கோபம் இருக்கும். சில சமயம் கண்ணீர் இருக்கும். இன்னும் சில கடிதங்களில் பக்கத்து வீட்டுக்காரனுக்கு கொடுத்த கோடாலியை, மண்வெட்டியை மறக்காமல் வாங்கி விடவும் என்று எழுதி இருக்கும்.

சிலர் அப்பாவுக்கு கடிதம் எழுதுவார்கள். சிலர் அம்மாவுக்கு எழுதுவார்கள். மனைவிக்கு கடிதம் எழுதியவர்களும் உண்டு.



என்னைப் பொறுத்தவரை மனைவியே கிடையாது. இந்த ஓடிப்போதலை அப்பா தாங்கிக் கொள்வார். மிக மிகச் சரியாகச் சொல்வதானால் இந்த ஓடிப்போவதற்குரிய அத்திவாரத்தை, அவரை அறியாமல் போட்டவரே அப்பாதான். எனவே நான் அம்மாவுக்கு கடிதம் எழுதினேன்.

கோடம்பாக்கம் இங்கிருந்து ஒரு கல் எறியும் தூரம். துணை நடிகைளின் வாசல் தளங்களோ கண் எறிகின்ற தூரம். அங்கிருந்து இந்தக் கடிதம் எழுதினேன்.

சென்னை, சூளமேடு.

அம்மா என்னைத் தேடாதே!

கடலோரம் வீசும் கடல்காற்றின் இரைச்சல் கேட்கிறது

காற்று அறைந்து சேதி சொல்கிறது

நான் போகின்றேன் அம்மா!

எங்கள் நிலங்களில் நின்றும் எதிரி அறை கூவுகிறான்

கும்பிட்டு, தலைசாய்த்து, மண்டியிட்டு

எதிரியின் கைகளை முத்தமிட,

என்ன கோழையா உன் மகன்?

அயர்லாந்தைப் பார்த்தாயா?

பொபிசானின் வழி வந்த தோழன் ஒருவன் அயர்லாந்துச் சிறையில் சாகும்வரை உண்ணாவ-ிரதம் இருக்கின்றான்.

கேள்விப்பட்டாயா?

மரணத்தின் வாசற் கதவுக்கே அவன் வந்து விட்டான்.

சோர்ந்து மரணப்படுக்கையில் கிடந்தவனின் மன உறுதியை குலைப்பதற்காக அதிகார வர்க்கத்தினர் சதி செய்தனர்.

பசியால் துடித்துக் கொண்டிருந்த அவன் முன்னால் மூக்கைத் துளைத்துக் கொண்டு வாசனை வீசுகின்ற விதம் விதமான உணவுப் பண்டங்களையெல்லாம் வரிசையாக சிறை நிர்வாகம் பரப்பி வைக்கிறது.

அதற்கும் அசைந்து கொடுக்காமல் தன் கொள்கைக்கான அகிம்சைப் போராட்டத்தில் சாவதற்கு துணிந்து நிற்கின்றான் அவன்.

இன்னம் சில நாட்கள் தான் இருந்தன அவனது மரணத்திற்கு. திடீரென ஏனோ அவன் மனதில் சிறு சஞ்சலம். அதைப் பயன் படுத்தி அவனுடைய உண்ணாவிரதப் போராட்டத்தை முறியடிக்க முனைகிறது சிறை நிர்வாகம். அந்தப் போராளியின் தாயை அவன் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது சிறை நிர்வாகம்.

பெற்ற தாயல்லவா? வயிறு பற்றி எரிய ஓடோடி வருகிறாள்.

சாவின் வாசல் கதவு வரை வந்து நின்ற தன் மகனைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுகிறாள்.

கண்ணீரை துடைத்துக் கொண்டு தன் மகனிடம் கூறுகிறாள்.

'மகனே! மனதை தளரவிடாதே'

'பொபிசான்சை எண்ணிப்பார்த்தாயா?'

'உனது கொள்கைகளுக்காக, உனக்கும் முன்னாள் இறந்து போன உன் தோழர்களை எண்ணிப்பார்த்தாயா? அவர்களுடைய தியாகங்களை சற்று நினைத்துப் பார்த்தாயா? மக்களுக்காக இறப்பது என்பது எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் அல்ல.'

**செழியன்**

'என் வயிற்றில் பிறந்த வீரனே, நீ செத்துப் போய்விடு!'

'என் இதயத்திலேயே இருக்கின்ற என் மகனே! என்னுடையதும், உன்னுடையதுமான மக்களுக்காக நீ இறந்து போய்விடு.'

'அதுதான் நமது மக்களுக்காக கடைசியாக நீ செய்யக் கூடியது.'

'உன் மரணத்தை எண்ணி பெற்ற என் வயிறு பற்றி எரிகின்றதடா மகனே!. ஆனால் உன் கடமையை நீ செய்தே ஆகவேண்டும். அது தான் உன் தாய்க்கும், உன் நாட்டுக்கும் நீ செய்கின்ற கடமையாய் இருக்கும்.'

அழுகின்றாள் அந்தத் தாய். செத்துப் போய்விடடா மகனே! என்று அழுகின்றாள் அந்தத் தாய்.

சிறை நிர்வாகம் அதிர்ந்து போகிறது.

சோர்ந்து போய் இருந்தவன் உற்சாகத்துடன் எழுகிறான். தளர்ந்திருந்த மனதில் உறுதி பிறக்கிறது. உறுதியுடன் தொடர்கின்றது அவனது உண்ணாவிரதப் போராட்டம். சில தினங்களில் அவனுடைய உயிர் பிரிகிறது.

அம்மா!

மறுபடியும் நாம் சந்திக்கின்றோமோ? இல்லையோ?

அயர்லாந்தில் இருக்கக் கூடிய இந்த வீரத் தாயைப் போன்று நீயும் இருப்பாய் என்று நான் நம்புகின்றேன்.

அன்புடன்
மகன்

(தொடரும்)

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# சுந்தர ராமசாமி-நினைவுகள்- 2


இரண்டும் ஒரே ஊற்றிலிருந்து எப்படி பெருக்கெடுக்கிறது?

இந்த வியப்பு என்னிடம் வெகு நீண்ட காலத்திற்கு குடி கொண்டிருந்தது. அனேக மற்ற எழுத்தாளர்களைப் போல் அல்லாமல், தன் ஜோலி, கதை, கவிதை தான் என்றில்லாமல், கொஞ்சம் கொஞ்சமாக அவரையும் அவர் எழுத்தையும் சுற்றியுள்ள விடயங்களை பற்றியும் எழுத ஆரம்பித்தார்.

தனக்கு பரிசு கிடைக்காமல் போய்விடுமோ என்ற தமிழ் எழுத்தாளனின் கவலையை அவர் தானும் பகிர்ந்து கொள்ளாமல், படைப்புக்கும் மொழிக்கும் சமூகத்திற்கும் சக்திகளென பண்டிதர்கள், சாகித்ய அகாடமிகள் பிரபல்யத்திற்கும் அதிகார சலுகைகளுக்குமாக, வெற்றிக்கும் அரசியல் சித்தாந்தங்களுக்கும் விலை போகும் நிலைக்கு எதிராக அவர் நிறைய எழுதினார்.

என் முன்னோடிகளை மதிக்காத எந்த பரிசும் எனக்கு வேண்டாம் என்று வெளிப்பட்ட முதல் குரல் அவரது. இந்த சு.ரா. தான் அந்நாட்களில், என்னிடம் "சமூகத்தில் எத்தனையோ துறைகளில், தளங்களில் சீர்கேடு நிறைந்திருக்க, எழுத்தாளனை மாத்திரம் நீங்கள் சாடுகிறீர்களே?" என்று கேட்ட சு.ரா.வும். அதையே நான் எழுதிக்கொண்டிருந்த போது, எல்லா இடத்திலும் இருப்பது தான். தமிழை மாத்திரம் பீடித்துள்ள நோய் அல்ல இது. நம்மூர் கோமாளிகளைத் தூக்கிச் சாப்பிடும் கோமாளிகள் கேரளாவில் உண்டு, மத்திய அரசாங்கத்திலும் உண்டு என்றவர் அவர். ஆனால் என் கட்சியையே தீவிரமாக சாட்சியப்படுத்தும் வகையில் அவர் கட்டுரைகளில் தமிழுக்கு மாத்திரமே நிகழும் அவக்கேடுகளை அவரே நிறைய அள்ளித் தருகிறார். முன்னர் அவருக்குத் தெரியாதது இப்போது தெரிகிறது என்று நான் சமாதானம் செய்து கொள்வேன். அத்தோடு நிற்கவில்லை. தமிழ் நாடு, இலக்கியம் பற்றி நான் எழுப்பிய சர்ச்சைகள் கேள்விகளை மையப்படுத்தியே அவர் ஜே ஜே சில குறிப்புகள் என்று ஒரு நாவலே எழுதினார். அதை தமிழ் நாட்டில் அல்ல மலயாளத்திய விவகாரமாக ஆக்கினார். பின்னால் நீல பத்மனாபன் பெயர்களை மாத்திரம் மாற்றி தேரோடும் வீதி எழுதவிருக்கிறார். சு.ரா. களனையே வேறிடத்திற்கு எடுத்துக் கொண்டு போகிறார். எல்லாம், நீல பத்மனாபனே தன் நாவலில் சுய வாக்குமூலம் அளித்துள்ளது போல, புனைவு என்று சொல்லி தப்பித்துக்கொள்ளும் விவகாரம் தான். ஆயினும் தமிழ் நாடு முற்போக்குகள் ஏமாறவில்லை. எதுவாக இருந்தாலும், விமரிசனமாக எழுதினாலும் சரி, புனைகதையாக ஆடையணிவித்தாலும் சரி, இவ்விடயங்களை எல்லாம் அக்கறை கொண்டு தன் குரலை எழுப்பியது அவரது மதிப்பை என் பார்வையில் உயர்த்தியது.

மேலும் அவர் தன்னை நெருங்கிய



தன்னைச் சுற்றியிருந்த வட்டார இளம் எழுத்தாளர் எல்லோருக்கும் அவர் வழிகாட்டியாகவும் ஊக்கமளிப்பவராகவும் இருந்தார். அந்த கூட்டம் மிகப் பெரிய கூட்டம். அதில் 1966 வரை நீல பத்மனாபனும் அடக்கம். "பிரசுரத்தைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். எழுதுங்கள்" என்று ஊக்கப்படுத்தியவர், தன் தலைமுறைகள் நாவல் எழுதப்பட்ட பிறகு சு.ரா. முற்றிலும் மாறிவிட்டதாகவும், அதன் காரணம், அது மிக சிறப்பாக வந்திருப்பதாக நகுலன் சு.ரா.விடம் சொன்னதால் ஏற்பட்ட பொறாமை என்று நீல. பத்மனாபன் தன் எழுத்து வாழ்க்கையையே கற்பனைப் பெயர்களால் மறைத்து எழுதிய தேரோடும் வீதி யில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

தமிழ் இந்தியா டு டே மதிப்புரைக்காக எனக்கு அனுப்பியபோதுதான் இதை நான் முதன் முதலாக படிக்கிறேன் (ஆகஸ்ட், 2004). அவரது அந்த நாவல் முழுதும் உண்மை விவரங்களால் நிறைந்தது. பெயர்கள் தான் கற்பனை. ஒவ்வொரு விவரம் பற்றிய அபிப்பிராயமும் நீல பத்மனாபனது. அவற்றை ஒதுக்கி விடலாம். ஆனால் விவரங்கள்? நீல பத்மனாபன் தன் தேரோடும் வீதியில் என்னையும் நிறைய சாடியிருக்கிறார். அந்த சாடலுக்கு அவர் ஆதாரம் காட்டும் கடிதங்கள் விவரங்கள் எல்லாம் உண்மை. ஆனால் அவற்றின் மேல் அவர் கட்டியெழுப்பும் விளக்கங்கள் தான் அவரது குரோத உணர்வின் வெளிப்பாடுகள். அந்நூல் முழுதிலும் உள்ள எனக்குத் தெரிந்த விவரங்கள் யாரைப்பற்றியுமான விவரங்கள் எல்லாம் உண்மை. அது போல சு.ரா. பற்றி அவர் எழுதியுள்ளது உண்மை என்றே நான் கொள்கிறேன். சு.ரா.வின் நெருங்கிய வட்டத்தில் இருந்த, அவர் ஆதரவை, நட்பை தொடக்கத்தில் பெற்ற நீல பத்மனாபன் பற்றியோ, தலைமுறை யிலிருந்து அவரது எந்த எழுத்து பற்றியுமோ சு.ரா.எதுவுமே எழுதியதில்லை. முற்றிலுமாக சு.ரா.வின் நினைவிலிருந்து நீல பத்மனாபன் அகற்றப்பட்டுவிட்டார்.

இந்த அகற்றலின் தொடக்கம் 1967-ல். பின்னர் ஜெயமோகனுக்கும், தருமு சிவராமுவுக்கும், ஞானக்கூத்தனுக்கும், நகுலனுக்கும் பின்னர் நிகழவிருந்தது போல. சிவராமு சு.ரா.வுக்கு எதிராகக் கொண்ட பகைமைக் காய்ச்சலும் தூற்றிய தூற்றலையும் கண்டு நான் மிக வருந்தியிருக்கிறேன். அதற்கெல்லாம் கொஞ்சமும் சு.ரா. தகுதி பெற்றவர் இல்லை. நல்லது செய்யப்போகப் பெற்ற பகைமை. இது தனி கேஸ். மாறாக, தி. ஜானகிராமனுடன், க.நா.சு.வுடன், செல்லப்பாவுடன் நான் கடுமையான அபிப்பிராய பேதங்கள் கொண்டிருந்திருக்கிறேன். எழுதியுமிருக்கிறேன். யாரும் என்னுடன் விரோதம் பாராட்டியதில்லை. க.நா.சு. இறந்த வெள்ளிக்கு முந்திய புதன் அன்று என்னைத் தேடி என் இருப்பிடம் வந்திருக்கிறார். நான் கால் முறிந்து நடமாடமுடியாது கிடந்த காலம் அது. தன் வீட்டார் எதிர்ப்பையும் மீறி என்னுடனான அவர் நட்பு தொடர்ந்தது. விமர்சகராக தன்னைக் காட்டிக்கொண்டவர், தமிழ் சமூக, இலக்கிய சூழலைப் பற்றி நிறைய எழுதியவர், எப்படி தலைமுறை நாவலையோ அல்லது நீல பத்மனாபன், ஜெயமோகன் தொடங்கி சு.ரா பேச மறுத்த யாரையுமோ இல்லையென்று கண்களை மூடிக்கொள்வது சாத்தியம்?

இளம் திறன் என்று உத்சாகப்படுத்துகிறார். ஒருவர் அல்ல நிறையப் பேரை. பின்னர் ஒரு சிலரை அதிக வளர்ச்சி காணும் நேரத்தில் இல்லை என்று கண்களை மூடிக்கொள்கிறார். இரண்டுமே சு.ரா. தான். இரண்டுமே உண்மை தான்.

## வெங்கட் சாமிநாதன்

இயல் விருது எனக்கு அளிக்கப் பட இருந்த செய்தியைக் கேட்டு, இது காறும் ஒரு காசு பயன் பெறாத, எந்த அங்கீகாரமும் பெறாதவரை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்று பாராட்டியதும் சு.ரா.தான். பின்னர் எனக்கு தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு அவரும் அவர் மனைவி கமலாவும் பாராட்டியதும் உண்மைதான். இங்கு வாருங்கள் நம் பேச்சுப் பதிவுக்கான ஏற்பாடுகளை இங்கு கண்ணன் செய்வான் என்று சொன்னதும் சு.ரா. அதுவும் உண்மை. பின்னர் என்ன நடந்தது? சு.ரா. கண்டு கொள்ள மறுத்த நீலபத்மனாபனின் கடுமையான குற்றச்சாட்டுக்கள் கொண்ட தேரோடும் வீதி பற்றிய மதிப்புரை காலச்சுவடு ஆண்டு மலரில் எழுதிய அதே எம் ஏ. நுஃமான் இப்போது எனக்கு இயல் விருது தரப்படுவதற்கு கண்டனமும் எழுதுகிறார். இது வரை நான் இயல் விருது பெறுவது பற்றி உற்சாகத் தோடு பாராட்டியது, இருவரும் பேசுவதற்கு நாகர்கோயிலில் ஏற்பாடுகள் செய்வது பற்றி பேசியது எல்லாவற்றையும் அவரது இப்போதைய உரத்த மௌனம் மறுக்கும். இது ஒன்று.


இரண்டாவதாக தமிழ் நாட்டு முற்போக்கு எழுத்துக்களை நான் தீவிரமாக தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது மாத்திரமே நுஃமானின் கண்களுக்கு என் நாற்பது [...] எழுத்து முழுமையுமே என்று பட்டுள்ளது. [...] மாத்திரமே சொல்லி அதற்காகவா இயல் வ[...] அளிக்கப்படுகிறது என்று கேட்கிறார்? [...] எழுத்தில் வேறு எதுவுமே அவர் பார்வை[...] இல்லை. ஆனால், சு.ரா. எழுதிய "வெ.சா.வின் கருத்துலகம் கட்டுரை [...] கருத்துக்களின், எழுத்தின் பரந்த தள[...] அவர் அறிவார் என்பது தெரியும். ஆ[...] நுஃமானின் குறுகிய பார்வையும், ப[...] பகைமையின் மூர்த்தண்யமும், அ[...] அங்கீகாரத்தைப் பெறுகிறது. மூன்றா[...] காலச்சுவடுக்கு தான் பொறுப்பல்ல எ[...] ஒதுக்கிக் கொள்வது. சரி பொறுப்பல்ல.


ஞானபீட, சாகித்ய அகா[...] பரிசுகளுக்கும், சங்கராசாரி[...] விவகாரங்களுக்கும், தமிழ்ச் ச[...] சீர்கேடுகளுக்கும், அவர் பொறுப்பல்லத[...] ஆனாலும் அவைபற்றி அறிக்கைக[...] கண்டனங்களும் அவரிடமிரு[...] கிளம்புகின்றனவே. இப்படி தான் பொறுப்ப[...] என்று சொல்லி தனக்கு வெகு அரு[...] இருக்கும் ஒன்று பற்றி எதுவும் பேச மறுப்ப[...] இவர் பொறுப்பில்லாத வெளி உலக ச[...] நிகழ்வுகளில் தன் தீவிர அக்கறை[...] வெளிக்காட்டும் சு.ரா. வும் ஒருவரே தானே.

என் இயக்கத்தில் பாரதியின் ஆ[...] ஈடுபாட்டையும், காந்தியின் குரலையும் கேட்ப[...] எழுதிய சு.ரா வும் உண்மைதான். அதே சு[...] தான் தன் காலச்சுவடு இதழுக்கு ந[...] எழுதலாம் என்றும் ஏற்புடையதாக இருந்த[...] பிரசுரிப்பதாகவும் எழுதிய சு.ரா.வும். எந்த சு[...] உண்மை? நுஃமானின் குதிரைப் பட்[...] பார்வையை அங்கீகரிக்கும் அளவுக்கா அவ[...] உணர்வுகள் குறுகிவிட்டன? மறுத்[...] அங்கீகரித்தோ குரல் எழுப்ப வேண்[...] சமயத்தில், அதை நான் திரும்பத் திரும்ப [...] உண்மையல்லவா என்று கேட்ட சமயத்[...] சாதிக்கும் மௌனத்திற்கு என்ன பொருள்?

தன்னை அண்டியவ[...] உற்சாகப்படுத்திய சு.ரா.வும் உண்மை. பின் [...] சங்கடப்படுத்தும் நிலையில் கண்க[...] மூடிக்கொள்ளும் சு.ரா.வும் உண்மை. ந[...] வேதனையில் உழன்ற சமயம் மரணத்தை எ[...] நோக்கியிருக்கும் சகோதரிக்கு எழுது என[...] ஆறுதல் சொல்லச் சொன்ன சு.ரா.வும் உண்[...] இயல் விருது பற்றி ஆத்மார்த்தமாக சந்தோ[...] கொண்டு என்னைப் பாராட்டிய சு.ரா.[...] உண்மை. பின் என்ன நிர்ப்பந்தத்தாலோ என்[...] வசை பாடிக் கண்டனம் செய்த நுஃமானி[...] எழுத்தை அங்கீகரிப்பதாகச் சொன்ன சு.ரா.[...] உண்மை. இயல்பான எளிமையும் கிண்டலு[...] கொண்ட சு.ரா.வின் எழுத்தும் உண்மை. பி[...] வாழ்க்கையின் சாரத்தை காணப்போகிறே[...] என்று சொல்லி பகட்டான, பூடகமான வார்த்தை[...] பந்தல் எழுப்பிய சு.ரா.வின் எழுத்தும் உண்[...] நட்பின் நெகிழ்ச்சி தரும் கணங்களைக் கொண்[...] கடந்த நாட்களும் உண்மை. இன்று எ[...] நிர்ப்பந்தத்தாலோ கொள்ளும் மௌனம் தரு[...] கசப்பும் உண்மை. இன்றைய கசப்பிற்கா[...] மௌனத்திற்காக, நேற்றைய நட்பையு[...] இனிமையையும் மறுப்பதற்கில்லை. இரண்டும் ஒரே ஊற்றிலிருந்து எப்படி பெருக்கெடுக்கிறது என்பது தான் தெரியவில்லை.




# அறிவுரையின் மதிப்பென்ன?

இந்த உலகில் மற்றவரிடமிருந்து இலவசமாகக் கிடைக்க கூடியது அறிவுரை ஒன்றுதான். அந்த அறிவுரைகள் எவ்வளவுக் எவ்வளவு ஒருவருக்கு உதவுகின்றது என்பது ஒருவருக்கும் சரிவரத் தெரியாது. சிலர் தாம் பட்ட அனுபவங்களைக் கொண்டு அதே விடயத்தில் மற்றவர்க்கு அறிவுரை சொல்வார்கள். இப்படியான அறிவுரைகள் ஓரளவிற்கு மற்றவர்களுக்கு



உதவக் கூடியதாக இருக்கின்றது. சிலர் தாம் மற்றைய விடயங்களில் பட்ட அனுபவங்களை வைத்துக் கொண்டு புதிய விடயத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்று ஊகித்து அறிவுரை சொல்வார்கள். இப்படியான அறிவுரைகள் எந்தளவிற்கு உதவுகின்றதோ இல்லையோ எடுக்கும் விடயத்தில் அவதானமாக இருக்க ஒருவகையில் உதவி செய்கின்றது என்று கொள்ளலாம். சிலர் அறிவுரை சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஏதோ சம்மந்தப்படாதவற்றை எல்லாம் உளறுவார்கள். இவர்களால் யாருக்கும் பயனில்லை. நேரம் வீணாக செலவழிவதுதான் மிச்சம். ஆனால் மற்றவர்களின் நன்மை பற்றி சற்றும் சிந்திக்காமல் தமக்கு சாதகமாக அமையவும், இலாபம் தேடவும் சிலர் மற்றவர்களுக்கு அறிவுரை கொடுப்பார்கள். இப்படிப் பட்டவர்கள் பற்றி மிகவும் அவதனாமாக இருக்க வேண்டும். இனம் கண்டு கொள்ள வேண்டும். இப்படியான அறிவுரைகளை இனம் கண்டு கொண்டால் பாதிப்புக்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

சென்ற வார இறுதியில் ஸ்காபரோ சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் சாமி அப்பாத்துரை அவர்களின் தலைமையில் நடை-பெற்ற இளம் சமுதாயத்தினரின் எதிர்காலம்

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

பற்றிய கலந்துரையாடல் இங்கு வாழும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை என்ன வழியில் கையாண்டால் அவர்கள் வாழ்க்கையில் நல்ல எதிர் காலத்தை காணலாம் என்ற விடயம் நிச்சயமாக வந்திருந்த பெற்றோர்களுக்கு நல்ல அறிவுரைகளாக அமைந்திருந்தது. இங்கு பாடசாலையிலும், பின்பு பல்கலைக்கழகத்திலும் படித்து பட்டம் பெற்று Malvern Community Centre இல் பொறுப்பான பதவியில் இருக்கும் நீதன் சண்முகராஜா என்ற இளைஞன் தான் சந்தித்த மற்றும் தனது சொந்த அனுபவங்களையும் கொண்டு பிள்ளைகளும், பெற்றோர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எவ்வாறு திறமையுடன் கையாள வேண்டும் என்ற மிக எளிய பேச்சு நடையில் எடுத்துச் சொன்னது மிகவும் போற்றப் படக்கூடிய அறிவுரைகளாக இருந்தன. இளம் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லி கொடுத்து வரும் K.G Master அவர்கள் படிப்பு விடயத்தில் பெற்றோர்கள் எவ்வாறு இலகுவாக பிள்ளைகளை கையாளலாம் என்று எடுத்துக் கூறியது பிள்ளைகளை வழி நடத்த தெரியாமல் தவிக்கும் பெற்றோர்களுக்கு நிச்சயமாக நம்பிக்கையை கொடுத்து இருக்கும். மூர்த்தி சிறிதானலும் கீர்த்தி பெரிதென்று சொல்லுவதைப் போல வந்திருந்த மக்கள் சிறிய எண்ணிக்கையில் இருந்த போதும், பேசப்பட்ட விடயங்கள், கலந்துரையாடல்கள் நிச்சயமாக போற்றப்படக் கூடியவையாகவே இருந்தன. வன்முறையால் தமது அன்பு செல்வத்தை பறிகொடுத்த தாயும், தந்தையும் அங்கு சமூகமளித்து தமது மனவேதனையை பகிர்ந்து கொண்டது ஒன்றுகூடலுக்கு இன்னும் அதிக மதிப்பைக் கொடுத்தது. இப்படியான கலந்துரையாடல்களும் அறிவுரைகளும் பல இடங்களில் பல தடவைகள் நடைபெறுவது வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

பாதை தவறிய பிள்ளைகளுக்கு காரணமே பெற்றோர்கள் தான் என இலகுவாக பெற்றோர்கள் மீது பழியைப் போட்டு விடலாம். பணம் சேர்க்கும் ஆசையில் இரண்டு மூன்று தொழில் செய்வதில் காலத்தைச் செலவிட்டதில் பிள்ளைகளைக் கவனிக்கவில்லை என்று குறை கூறுவதை நாம் பலதடவைகள் கேள்விப்பட்டு இருக்கின்றோம். சரி, தவறு நடந்துவிட்டது என்ன வழியில் திருத்தலாம் என்று வழி தேடும் பெற்றோர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேறு வழியே இல்லையா? உண்மை அன்பு, பாசத்தை உணராத இளைஞர்கள் வன்முறையை கையில் எடுக்கின்றார்களே, இவர்கள் எதிர்காலம் என்ன? எப்படி திருத்துவது என்று அன்றொரு நாள் இரவு வானொலியில் "என் மன வானில்" நிகழ்ச்சியில் நேயர்களிடம் ஒரு கேள்வி வைக்கப்பட்டு பல நிமிடங்கள் கழிந்தும் பரிந்துரை சொல்ல ஒருவரும் முன்வரவில்லை. பெரியவர் ஒருவர் அதிகாலை நான்கு மணிக்கும் விழித்திருந்து நிகழ்ச்சியை கேட்பவர் வந்தார். அவர் சொன்னார், "நீங்கள் பழியை யார் மேல் போடலாம் என்றால் உடனே பறந்து வந்து சுமத்தியிருப்பார்கள். நீங்கள் பாதை கேட்கிறீர்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. நீங்கள் கேட்டதன் நோக்கமென்ன" என்று என்னிடம் கேட்டார். நான் சிவனே என்று எனது பாட்டில் வாகனத்தில் சென்று கொண்டு இருந்த போது உரக்கக் கேட்ட தமிழ் பாடலின் சத்தம் தட்டி எழுப்பி யார் என்று திரும்பி பார்க்க, என்னடா பார்க்கிறாய் என்று அன்புடன் தமிழில் விசாரித்த சில தமிழ் இளைஞர்களின் கதையை அவரிடம் கூறினேன். நீங்கள் என்ன செய்தீர்கள் என்று என்னிடம் அவர் கேட்டார். பேசாமல், பதிலுரைக்காமல் விரைவாக அந்த இடத்தை விட்டு பயத்துடனும், கவலையுடனும் சென்ற சோகக் கதையை அவரிடம் கூறினேன். அவர் எனக்கும் வானொலி நேயர்களுக்கும் கூறியது என்னவெனில் அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்கள் செல்லும் வாகன இலக்கத்தை எடுத்து இரகசியமாக பொலீசில் முறையீடு செய்திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். அவர்களை அப்படித்தான் திருத்த வேண்டும் என்றார். கண்ணீர் அஞ்சலிச் சுவரொட்டிகளில் ஒருவரது பெயர் வரும் இளைஞர்களின் பெயர்களில் படங்களில் ஒன்றாவது குறைவதற்கு அது வழி செய்யும் என்றார். எத்தனை தமிழர்கள் எமது இனத்து இளைஞர்களை இந்த வழியில் திருத்த முன்வருவார்கள்? சிந்திக்க வேண்டிய விடயம்.

விமர்சனம் செய்யுங்கள். ஆனால் எம்போன்ற கலைஞர்களை வளர்ப்பதை விட்டு நாம் இருக்கின்ற துறையை விட்டு ஓடி விடச் செய்யாதீர்கள் என்று அன்புடன் கேட்டுக் கொண்ட ரவிஅச்சுதன் சிந்திக்க வைத்தார். விமர்சனங்களை வாசித்ததில் 'மெதுவாக என்னைத்தொட்டு' திரைப்படத்தை பார்க்கவில்லை என்று எழுதி இருந்தீர்கள். உங்களைப் போன்றவர்கள் எமது படைப்புக்களை பார்க்காமல் விட்டால், நீங்கள் விமர்சிக்கின்ற விடயங்களை நாங்கள் திருத்திக் கொள்ள சந்தர்ப்பத்தை தராமல் விட்டு விடுகின்றீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் வாசகர்கள் கூட நீங்கள் எழுதுவதை பார்த்து எமது தயாரிப்புக்களை பார்க்காமல் தவிர்த்து விட்டால் திரைப்படம் தயாரிப்பவர்களின் முதலுக்கு மோசம் உண்டாகும். புதய தயாரிப்புகள் தடைப்படும். அதனால் பாதிப்பு எமக்குத் தானே என்று கண்ணியத்துடன் எடுத்துச் சொன்னார். சினிமாத்துறையில் பாடுபடும் அந்த கலைஞனின் ஆதங்கம் சாதாரண மனிதனின் மனதை மாற்றி எப்படிப்பட்ட திரைப்படத் தயாரிப்புக்களானாலும் எமது தயாரிப்புக்களை பார்த்து ஆதரித்து மற்றவர்களையும் பார்க்க செய்து விடுவது என்று திடமான முடிவு எடுக்க வைத்தது. ஏனெனில் எமது கலைஞர்களின் கலைகளின் எதிர்காலம் எமது கைகளிலேயே இருப்பது உண்மை என்றபடியால். மனதை மாற்றிய அந்தக் கலைஞனுக்கு மனப்பூர்வமான நன்றி. செய்த தப்பிற்கு மனம் வருந்துவதும், திரும்பவும் அதை செய்யாமல் விடுவதும் தான் மனித பண்புக்கு அழகு.

ஊருக்கு தான் உபதேசம் அது எனக்கு இல்லை என்பது போலத்தான் மனிதர்கள் நடந்து கொள்வார்கள் என்பதை 'தமிங்கிலீசுத் தமிழர்கள்' பகுதி மீண்டும் சாதாரண மனிதனுக்கு ஞாபகப்படுத்தி இருக்கின்றது. நாம் எல்லோரும் எந்தத் தொழிலை செய்தாலும் ஆங்கில மொழியில் ஆளுமையை வளர்த்துக் கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்று பொதுப்படையாக எழுதியதை பலர் தனிப்பட்ட முறையில் தம்மை இழிவு படுத்தியதாக எடுத்துக் கொண்டது கவலைக்குரியது. தயவு செய்து பொறுமையுடன் முழுவதையும் வாசித்தீர்களானால் உங்களுக்கு உண்மை விளங்கும். பாதிக்கப்படுவதாக உணர்வீர்களானால் சாதாரண மனிதனிடம் நேரே எடுத்துக்கூறுங்கள். செய்த தவறினை ஏற்றுக்கொள்வதற்கும் மன்னிப்புக் கேட்பதற்கும் அவன் என்றுமே பின்நின்றதில்லை. அதுதான் மனித நேயத்தை வளர்க்கும்.


பார்வைகள் தொடரும்

பரம்ஜி

ஒரு சாதாரண மனிதன்

---

## சமநிலை



தவறு என்பது
தவறிச் செய்வதுதானே

கல்வி ஊட்டத்தில்
தவறு விடவேண்டும்
என்ற ஒரு கொள்கையும் உண்டு

தவறு என்பது
மன்னிக்கப்பட வேண்டியது


மன்னிப்பு ஒரு பந்துமாதிரி

மன்னிப்பை ஏற்க மறுத்து
பழிக்குப்பழி தீர்ப்போரை
அது
திருப்பித் தாக்கும்

தன்னைச் சிலுவையில் அறைந்தோரை
இயேசு மன்னித்தார்

அவர்மீது ஆணி அடித்தோர்
தமது தவறை உணர்ந்து
தினம் தினம் மன்னிப்புக் கேட்டனர்

அவர்களுக்கு
நாடு கிடைத்தது.



முத்துராஜா




உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?

நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

பரம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN
Sales Representative


HOME LIFE GTA REALTY INC.
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# பழசு ஆனாலும் தங்கம் தங்கமடி! 178

'அவரால் முன்புபோல விளையாட முடியாது'. 'அவரது இளமைக் கால ஆட்டம் இனிமேல் தொடராது'. சச்சின் டெண்டுல்கர் நிலை குறித்து துடுப்பாட்ட வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்கள்தான் இவை. ஆனால் எதற்கும் எப்போதும் அவர் வாய் திறக்கவில்லை. காலம் கனியும் எனக் காத்திருந்தார். அவற்றுக்கு சச்சின் தனது மட்டையால் தற்போது பதில் அளித்துள்ளார். கடந்த மே யில் லண்டனில் மேற்கொண்ட அறுவைச் சிகிச்சை காரணமாக ஐந்து மாத் ஓய்வுக்குப் பிறகு நாகபுரியில் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் அவர் பங்கேற்றார். அதில் 93 ஓட்டங்களைச் சேர்த்து விமர்சகர்கள் பலரது வாயை ஜாம்பவான் சச்சின் அடைத்துள்ளார்.

பவுண்டரியுடன் ஆட்டத்தைத் தொடங்கிய சச்சின், ஒருபோதும் எதிரணி பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தாதவாறு பார்த்துக் கொண்டார். இடையில் சிறிது காலம் தனது மட்டை வீச்சில் மாறுதல் செய்திருந்த சச்சின் நாகபுரி போட்டியில் தனது இளமைக்கால ஆட்டத்தை மீண்டும் வெளிப்படுத்தினார். நாலாபுறமும் பந்துகளை விளாசி, தன் மீதான விமர்சனங்களுக்கு மட்டையாலே பதிலளித்து விட்டார்.



'சச்சின் வருகை, மைதானத்துக்கு வெளியேயும், உள்ளேயும் அணிக்கு உந்து சக்தியாக இருக்கிறது', என வெற்றிக்குப் பின் புகழ்ந்தார் அணித் தலைவர் ராகுல் திராவிட். 16-வது வயதில் இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட்டு பாகிஸ்தான் சென்றபோது அனைவரது கவனத்தையும் சச்சின் தன்பால் ஈர்த்தவர். அப்போது சுழல் பந்து வீச்சாளர் அப்துல் காதிரின் பந்துகளை துவம்சம் செய்த போது, உலகமே சச்சினைத் திரும்பிப் பார்த்தது. சர்வதேச துடுப்பாட்ட போட்டியில் அதிக ஓட்டங்கள் (13,735) அதிக சதம் (38), அதிக ஆட்ட நாயகன் விருது (50), தற்போது விளையாடும் வீரர்களில் அதிக சராசரி (44.59) உள்ளிட்ட பல்வேறு சாதனைகளுக்குச் சச்சின் தான் சொந்தக்காரரர். அதிகமான ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்ற வீரர் என்ற சாதனையை (தற்போது 349) நெருங்கிக் கொண்டிருக்கும் சச்சின் (வாசிம் அக்ரம் 356 போட்டிகளில் பங்கேற்று முதலிடத்தில் இருக்கிறார்) மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளது இந்திய துடுப்பாட்டத்துக்குப் புத்துணர்ச்சியே! அவுஸ்திரேலியாவை அதன் குகையிலேயே ரெஸ்ற் தொடரில் மோதுகின்றது மேற்கிந்தியத் தீவுகள். இவ்விரு அணிகளிடையே மூன்று ரெஸ்ற் போட்டிகள் நடைபெற உள்ளன. முதல் ஆட்டம் பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் வியாழக்கிழமை தொடங்கியது. முதல் ஆட்டத்திலேயே அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. ஆஷஸ் தொடரை இங்கிலாந்திடம் இழந்தாலும், நட்சத்திர வீரர்களை எதிர்த்து விளையாடி உலக சாம்பியன்தான் என்பதை சமீபத்தில் முடிவுற்ற 'ஐசிசி சூப்பர் சீரிஸ்' தொடரில் அவுஸ்திரேலியா நிரூபித்துள்ளது.

**எஸ். கணேஷ்**

அந்த அணியை, இத்தொடரில் தோற்கடிப்போம் என சூளுரைத்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணித்தலைவர் சிவநாராயணன் சந்தர்பால். ஒரு காலத்தில் உலகப் புகழ் பெற்ற மேற்கிந்தியத் தீவுகள், கடைசியாக ரிச்சி ரிச்சர்ட்சன் தலைமையில் 1992 - 1993 இல் அவுஸ்திரேலியாவில் தொடரை வென்றுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட அத்தொடரை 2 - 1 என வென்றது. தற்போது மூன்று ஆட்டங்களில் அவுஸ்திரேலியாவின் பலத்தை பரீட்சித்துப் பார்க்க உள்ளது மேற்கிந்திய தீவுகள். (சிலவேளை கனவாக இருக்கலாம்)

அவுஸ்திரேலியாவில் கடைசியாக தொடரை வென்றதற்குப் பிறகு, அவுஸ்திரேலியாவுடன் 22 ஆட்டங்களில் விளையாடியுள்ளது மேற்கிந்திய தீவுகள். ஆனால் ஆறு போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அதே சமயம், கடைசியாக 2000 - 2001 நடைபெற்ற தொடரில் 5 - 0 என அபார வெற்றி கண்டது உள்பட 15 ஆட்டங்களில் அவுஸ்திரேலியா வாகை சூடியுள்ளது. "வலுவான அணி அவுஸ்திரேலியா என்பது எல்லோருக்கும் தெரியும். அதே சமயம் மேற்கிந்திய தீவுகள் அணியிலும் அவர்களுக்கு நிகரான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள் உள்ளனர்" என புதன்கிழமை செய்தியாளர்களிடம் சந்தர்பால் பேசியுள்ளார். இவ்விரு அணிகளிடையிலான இரண்டாவது ரெஸ்ற் போட்டி ஹோபர்ட்டிலும் (நவ. 17 - 21) மூன்றாவது ரெஸ்ற் போட்டி அடிலெய்டிலும் (நவ. 25 - 29) நடைபெற உள்ளன.

## வளர்ந்து வரும் இளம் வீரர்

உள்ளூர் போட்டியில் குறைந்த பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்த சிறப்பை பெற்றுள்ளார் இலங்கைவீரர் கவுசல்யா வீரரத்னே. ராகம துடுப்பாட்ட கழகத்துக்கும், குருனேகலா அணிக்கும் இடையே கொழும்பில் திங்கள்கிழமை ஒருதின உள்ளூர் துடுப்பாட்ட போட்டி நடைபெற்றது. அதில் ராகம துடுப்பாட்ட கழகத்துக்காக ஆடிய வீரரத்னே 12 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்து புதிய சாதனை படைத்துள்ளார். 24 வயதாகும் வீரரத்னே 18 பந்துகளிலி 8 சிக்ஸர், 2 பவுண்டரி உள்பட 66 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் ஆதம் ஹோலியோக் 1994 ஆம் ஆண்டு 15 பந்துகளில் அரை சதத்தைக் கடந்ததே உள்ளூர் போட்டியில் சாதனையாக இருந்து வந்தது. சர்வதேச ஒருதின போட்டியில் இலங்கை வீரர் ஜயசூர்யா 17 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்து சாதனை படைத்துள்ளார்.

## ICC TEST பந்துவீச்சார் தரவரிசை

சர்வதேச துடுப்பாட்ட கவுன்சில் (ஐசிசி) வெளியிட்ட ரெஸ்ற் பந்துவீச்சு தரவரிசையில் அவுஸ்திரேலியா வீரர் ஷேன் வார்னே முதலிடத்தைப் பிடித்துள்ளார். 10 ஆண்டுகளுக்குப் பின் இந்த அந்தஸ்தைப் வார்னே பெற்றார். இதில் முதல் 10 இடங்களில் இடம்பிடித்த ஒரே இந்தியர் இர்ஃபான் பதான் இவர் 10-வது இடத்தைப் கைப்பற்றினார். இரண்டாவது இடத்தைப் பிடித்தவரும் அவுஸ்திரேலியா வீரரே. கிளென் மெக்கராத்துக்கு இந்த தகுதி கிடைத்தது. இலங்கையின் முத்தையா முரளீதரன் மூன்றாவது இடத்தையும், இங்கிலாந்தின் ஆண்ட்ரூ பிளின்டாஃப் நான்காவது இடத்தையும், தென் ஆப்பிரிக்காவின் ஷான் போலக் ஐந்தாவது இடத்தையும் கைப்பற்றினர். தென். ஆப்பிரிக்காவின் நிதினி, பாகிஸ்தானின் ஷோயிப் அக்தர், சமிந்தா வாஸ் (இலங்கை), மாத்யூ ஹோக்கார்டு (இங்கிலாந்து) முறையே ஆறு இல் இருந்து ஒன்பதாவது இடத்தைப் பிடித்தனர். இந்தியாவின் கும்ப்ளே 12-வது, ஹர்பஜன் வது இடத்தில் பின்தங்கினர். ஐசிசி ரெ Batting தரவரிசையில் தென் ஆப்பிரிக்கா ஜேக்ஸ் காலிஸ் முதலிடத்தைப் கைப்பற்றின இரண்டாவது இடம் அவுஸ்திரேலியாவின் ரி பாண்டிங் வசமானது. மூன்றாவது இடத் இந்தியாவின் ராகுல் திராவிட், நாலா இடத்தை வீரேந்திர சேவாக் கைப்பற்றி மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாராவு ஐந்தாவது இடம். மாத்யூ ஹேடன் (அவுஸ மார்கஸ் டிரஸ்கோதிக் (இங்கிலாந் இன்சமாம் - உல் ஹக் (பாக்) ஆன் ஸ்ட்ராஸ் (இங்கிலாந்து), சிவநாராயண சந்தர்பால் (மே.இ.தீவுகள்) முறையே ஆற இருந்து 10-வது இடத்துக்கு வந்தன இந்தியாவின் சச்சின் டெண்டுல்கருக்கு 13-வ இடம் கிடைத்துள்ளது.

## தீபாவளி கொண்டாட்டம்!

ஜார்க்கண்ட் சிங்கம் மகேந்திர சி தோணி சரமாரியான 'ரன்' வெடி வெடித் இலங்கையை வீழ்த்தி இந்தியாவி மகிழ்ச்சியான தீபாவளி கொண்டாட்டத் தொடங்கிவைத்தார். அந்த 24 வய இளங்காளை 145 பந்துகளில் 10 சிக்ஸர்கள், பவுண்டரிகளுடன் 183 ஓட்டங்கள் குவித் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தத அரண்மனை நகர் என பெருமையுட அழைக்கப்படும் ஜெய்ப்பூரில் திங்கட்கிழமை இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒரு தின போட்டியில் அவரது அதிரடியால் இந்திய எளிதாக வென்றது. ஒரு ஆட்டத்தில் 1 சிக்ஸர்கள் அடித்த ஒரே இந்திய என் பெருமையையும் தோணி பெற்றுள்ளார் ஒருதினப் போட்டியில் அதிக ஓட்டங்கள் அடித் விக்கெட் காப்பாளர்கள் வரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதற்கு முன் ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருதின போட்டியில் அதிகபட்சமாக 172 ஓட்டங்கள் அடித்த அவுஸ்திரேலிய அணியின் விக்கெ காப்பளர் கில்கிரைஸ்ட் இதுவரை உய இடத்தில் இருந்தார். இலங்கை அணிக்கு எதிராக 1999 இல் நடந்த ஒருதினப் போட்டியில் 183 ஓட்டங்கள் குவித்தார் முன்னாள் அணித்தலைவர் கங்குலி. அப்பட்டியலில் தோனியும் சேர்ந்துவிட்டார். நியூசிலாந்துக்கு எதிரான ஒருதினப் போட்டியில் அதிகபட்சமாக 186 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார் சச்சின் டெண்டுல்கர். ஒருதினப் போட்டியில் அதிகபட்ச ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரரின் வரிசையில் சச்சின் முதலிடத்தில் உள்ளார். ஜெய்ப்பூர் சவாய் மான்சிங் ஸ்டேடியம் சென்றகிழமை விக்கெட் காப்பளர்களின் களமாக விளங்கியது.



# அமிதாப் ஜோடியாக ரேவதி

தமிழ் திரைப்பட வரலாற்றில் மறக்கமுடியாத நடிகை ரேவதி. இவருக்கென்று ஒரு தனி பாணி உண்டு. கவர்ச்சி, ஆபாசம் இல்லாத இவரது நேர்த்தியான நடிப்பு அனைவரையும் எளிதில் கவரும். நடிப்பு மட்டுமன்றி, டைரக்ஷனிலும் தனது திறமையை நிரூபித்தவர் இவர். திரையுலகைத்தாண்டி, பல்வேறு சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இதன் ஒரு கட்டமாக பாராளுமன்றத் தேர்தலில், சுயேட்சையாகப் போட்டியிட்டு கணிசமான ஓட்டுக்களை பெற்ற பெருமையும் இவருக்குண்டு.

இப்படிப்பன்முகத் திறமை படைத்த ரேவதி தற்போது தனது 100வது படத்தைத் தொட்டிருக்கிறார். இருப்பினும் இது தமிழ்ப்படமல்ல. (இது தான் ரேவதிக்கும் வருத்தம்). இந்திப்படம். படத்தின் பெயர் "தில் ஜோ பை கியாகே". படத்தின் ஹீரோ அமிதாப்பச்சன் என்பது தான் முக்கிய விடயம். இவரது மகன் அபிஷேக் பச்சனும் இப்படத்தில் உண்டு என்பது போனஸ் தகவல். படத்தை இயக்கி இருப்பவர் ரமேஷ்சர்மா.


இதன் படப்பிடிப்பு, மொரிதியசில் முழுவதுமாக நடந்துள்ளது. இப்படி சதம் அடித்த மகிழ்ச்சி ஒரு புறம்; அமிதாப்புடன் நடித்த மகிழ்ச்சி ஒரு புறமுமாக பூரித்துப் போய் இருக்கிறார் ரேவதி. அமிதாப்பை வைத்து ஒரு இந்திப்படத்தை இயக்க



எண்ணிக் கொண்டிருந்தார் ரேவதி. அந்த நேரத்தில் அவருடன் ஜோடியாக நடிக்க திடீரென வாய்ப்பு வரவே மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு நடித்துள்ளார். இந்த எதிர்பாரா வாய்ப்பை இன்னும் அவரால் நம்ப முடியவில்லை.

இது குறித்து ரேவதி கூறும்போது, "ஒரு நிமிடம் திரும்பி பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது. நான் நடிக்க வந்து 25 ஆண்டுகள் ஆகி விட்டன. என்றாலும் தற்போது நான் எனது 100வது படத்தில் நடித்திருப்பதை, ஒரு வழக்கமான நிகழ்வாகவே பார்க்கிறேன். ஆனால் அமிதாப்புடன் நடித்த அனுபவங்கள், முழுக்க முழுக்க வித்தியாசமானவை. உடன் நடிப்பவர்களையும் நொடியில் பிரமிக்க வைத்து விடுபவர் அமிதாப்" என்கிறார். அதே பிரமிப்புடன் அமிதாப்பின் மகன் அபிஷேக், ஏற்கனவே ரேவதியின் இயக்கத்திலுருவாகிய எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு படமான 'பிர் மிலங்கே' படத்தில் நடித்துள்ளார். இதனால் இந்தப்பட மூலம், இரண்டாவது முறையாக அபிஷேக்குடன் இணைந்து ரேவதி பணியாற்றியுள்ளார்.

விரைவில் அமிதாப்பை ஹீரோவாக வைத்து இந்தியில் புதிய படம் ஒன்றையும் ரேவதி இயக்கவுள்ளார்.



# வீட்டின் விலை 2006 இலும் அதிகரிக்காலம்! தொடர்-217

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

இவ்வருடத்தில். இதுவரை வீட்டின் விலையில் அதிகரிப்பே ஏற்பட்டுவருவதை. இந்த ஆக்கங்களை தொடர்ந்து வாசித்து வருபவர்களினால் அவதானிக்க கூடியதாக இருக்கும். கடந்த சில ஆண்டுகளாக வீட்டின் விலை குறையலாம் என எதிர்பார்த்தவர்களிற்கு இது ஒரு பெரிய ஏமாற்றமாகவே காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்களை, பொருளாதார ஆய்வாளர்கள் முன் வைக்கின்றனர். இருந்தும், ரொறொன்ரோ பெரும்பாகத்தின் (Greater Toronto Area - GTA) வீட்டு விலை மாற்றத்தை, கடந்த 50 இற்கு மேற்பட்ட வருடங்களில் விஞ்ஞான ரீதியாக ஆராயும் போது இந்த காலகட்டத்தின் விலை ஏற்றமே. நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. ஏறத்தாள 9 வருடங்கள் தொடர்ச்சியாக ஆஸ்தியின் விலை அதிகரித்து வந்துள்ளது. அதற்கமைய CMHC (Canada Mortgage and Housing Corporation) இன் அறிக்கையின்படி, அடுத்த ஆண்டும் (2006) வீடு, கொண்டோக்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக ஏறத்தாள 6% வரையான ஆண்டிற்கான, சராசரி விலை அதிகரிப்பு காணப்பட்டது. ஆனால் அடுத்த வருடத்தின் வீட்டின்விலை GTA இல் 4% அதிகரிக்கலாம் என தெரியப்படுகின்றது. அடுத்த வருடக்கடைசியில் வீட்டின் சராசரி விலை $348.750 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை குறையலாம் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

| | |
|---|---|
| 1996இல் வீட்டு சராசரி விலை | $198,150 |
| 2004இல் வீட்டு சராசரி விலை | $315,231 |
| 2005இல் வீட்டு சராசரி (எதிர்பார்த்தல) | $335,337 |
| 2006இல் வீட்டு சராசரி (எதிர்பார்த்தல்) | $348,750 |

மேலும், அடுத்த வருட இறுதிபகுதிக்குள் வட்டி வீதமும் இப்பொழுதுள்ள வட்டி வீதத்தை விட ஏறத்தாள 1% வரை அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆண்டில் கடந்த பத்து (10) மாதங்களில் (ஜனவரி - ஒக்ரோபர்) விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 73,514 ஆகும். இந்த எண்ணிக்கை 2004 இன் முதல் பத்து மாதங்களைவிட அதிகமாகக் காணப்படுகின்றது. (2004இல் முதல் பத்து மாதங்களில் விற்கப்பட்டவை 73,202) இந்த அதிகரிப்பு, வீடு வாங்குபவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக CMHC இன் ஒன்ராரியோ பெரும்பாக பொருளாதார ஆய்வாளர் தெரியப்படுத்தியுள்ளார். இத்துடன் ஒக்ரோபர் 2005இன் வீட்டின் விலை செப்ரெம்பர் 2005 ஐ விட 1% இனால் அதிகரித்து $342,450 ஆகக் காணப்படுகின்றது. இந்த பெறுமதி முந்தைய ஆண்டின் ஒக்ரோபரை விட 6% அதிகமாகக் காணப்படுகின்றது.

### ஒரு வீட்டின் சில பகுதிகளின் வாழ்வுக் காலம்

| | |
|---|---|
| வழக்கமான Roof Shingles | (12 - 15) வருடங்கள் |
| தரமான Roof Shingles | (25 - 30) வருடங்கள் |
| சரிவு குறைந்த கூரைக்குரிய Shingles | (10 - 15) வருடங்கள் |
| வீட்டின் வெளிப்பகுதியின் பூச்சு | (4 - 6) வருடங்கள் |
| Driveway Sealer | (1 - 3) வருடங்கள் |
| Garage Door Opener | (8-12) வருடங்கள் |
| கார் தரிக்கும் Asphalt Driveway | (10 - 20) வருடங்கள் |
| வழக்கமான Furnace | (20 - 25) வருடங்கள் |
| Air conditioner | (10 - 15) வருடங்கள் |
| Toilet | (30 - 40) வருடங்கள் |
| Water Heater | (8 - 12) வருடங்கள் |

(குறிப்பு - விதிவிலக்குகள் இருப்பதனை கவனத்தில் கொள்க.) கருதப்படும்.

### புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளின் எண்ணிக்கை குறையலாம்.

GTA பகுதியில் புதிதாக நிர்மாணம் செய்ய இருக்கும் வீடுகளின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்படலாம் என புள்ளிவிபரம் தெரியப்படுத்துகின்றது. இதுவரை (ஒக்ரோபர் இறுதிவரை - 2005) யிலான புதிய வீடுகளின் எண்ணிக்கை 24,900 ஆக 34,200 இலிருந்து குறைவு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது. நுகர்வோர் அடுக்ககத்திலுள்ள அலகுகளை (Condominum Apartment) வாங்குவதால் இந்த எண்ணிக்கை ஏறலாம் எனவும் ஒரு சாரார் எதிர்பார்க்கின்றார்கள். CMHC இன் அறிக்கையின் படி ஆஸ்தி வாங்குபவர்கள் புதிதாக நிர்மாணம் செய்பவற்றை வாங்குவதை விட Resale ஐ வாங்குவதை நாடுகிறார்கள் என்று தெரியப்படுத்தியுள்ளது.

புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகள், கொண்டோக்களின் விலை, ஒப்பீட்டு ரீதியில் திருப்பி விற்கும் வீடுகள், கொண்டோக்கள் விட அதிகமாகக் காணப்படுவதே காரணமாகும். கடந்த சில வருடங்களாக புதிதாக நிர்மாணம் செய்பவற்றை வாங்கியவர்கள் இப்பொழுது Resale பக்கம் திருப்பியுள்ளார்கள் எனவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. இதற்கு உதாரணமாக, அண்மையில் மார்க்கம் பகுதியில், ஒரு வீடு விற்கும் அலுவலகம் புதிதாக ஒரு Site ஐ திறந்தது. இதில் குறிப்பிட்ட எண்ணிக்கை வீடுகளே சந்தைக்கு வந்துள்ளன.

இவற்றின் விலையை ஆராயும்போது ஒரே அளவான ஆனால் (10 - 15) வருட பழைய வீடுகளின் விலை 30இலிருந்து 50ஆயிரம் வரை குறைவாகக் காணப்படுகின்றது. புதிய வீடுகளின் விலை அதிகரிப்பிற்கு, வீடு நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் தங்கள் பல காரணங்களை முன்வைக்கின்றார்கள். உதாரணமாக வீடு கட்ட பாவிக்கும் மூலப் பொருட்களின் அதீத விலை அதிகரிப்பு. இது உண்மையும் கூட. இந்த ஆண்டில் மட்டும் கட்டிடத்திற்கு பாவிக்கப்படும் பொருட்களின் விலை 20% வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### 1% RULE

1% Rule வீட்டின் திருத்த வேலைகளிற்கான செலவு பற்றிய ஒரு குறிப்பிட்ட பெறுமதியை தெரிவிக்கின்றது. அதாவது ஒவ்வொரு வருடத்திற்குமான வீட்டின் திருத்த வேலைகளிற்கான செலவு வீட்டின் பெறுமதியின் 1% மாகக் காணப்படலாம். அதாவது வீட்டின் விலை $300,000 ஆக இருந்தால் ஒரு வருடத்திற்குரிய திருத்த வேலைகளிற்கான செலவு $3000 ஆகக் கொள்ளலாம். நிச்சயமாக, இப்படித்தான் இருக்க வேண்டும் என்றல்ல, இருந்தும் இதனை ஒரு எண்ணிக்கையாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட வருடத்தில் Furnace மற்றவேண்டும் என்றால் $2500 - $3000 தேவைப்படலாம். இன்னொரு வருடத்தில் Roof Shingles மாற்றவேண்டும் எனவும் $ 2500 - $3000 தேவைப்படலாம். (தெரிந்திருக்க மட்டுமே)







Mccowan/16th Ave
Detached-Storey
Bedrooms: 3+1
4 Washrooms
Over $40K Renovation
Finished Bsmt




Mccowan/Finch
Condo Townhouse
2- Storey
3 Bedrooms, 1 Washrooms
Easy Access to Shopping, TTC





Warden/Lawrence
Free Standing building
Central Location
Clean Office Space
Close To Major Hwy.




Whites/Sheppard
Detached 2- Storey
4 Bedrooms, 3 Washrooms
3100 Sq Ft, TTC, School,
Double Door Entry

HOMELIFE HIGHER STANDARDS




Cawthra/Lakeshore
Detached-Bungalow
Bedrooms: 3+2
2 Washrooms
Sep.Entrance
Finished Bsmt.Apartment




Dufferin/Lawrence
Well Established Fast Food
Low Rent, $1320/Month
Including, 40 Seats
Eat-In Area,
High Traffic.

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397



S&S Art.

HOMELIFE/GTA Realty Inc.

1711McCowan Rd, Suite 206, Toronto, ON, M1S-3Y 3., Office: 416-321-6969
145 Traders Blvd., Suite 28, Mississauga,ON,. Office: 905-712-2666



கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling



Nantha Aiyadurai
Cell: 613 850 9931
Business: 613 823 7555 Fax: 613 825 8177
3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

COLDWELL BANKER
COBURN REALTY

BRIARGREEN




Fabulous spacious Bungalow
in quiet neighborhood.
Hardwood floors on main level.
Fireplace in living room,
Bright basement with gorgeous oak
gas firplace.Huge 4th bedrm with
3pc bathroom.
Asking Only:$299,900

S&S Art.

# முருக வழிபாடும் காவடியும்

சிவன் கோயில்களில் நடனமாடும் வழக்கம் இல்லாமற் போகவே அக்கோயில்களுக்குச் செல்பவர்களும் குறையலாயினர். நாயன்மார் காலத்தில் முதன்மை பெற்றிருந்த சிவபெருமான் வழிபாடு குன்றிவர, முருக வழிபாடு மேலோங்கியது. முருகக் கடவுளை முற்காலத்தில் குறிஞ்சிநிலத் தமிழர் வழிபட்டு வந்தமையினாலும் முருகனும் சிவனும் ஒன்றே என்ற கந்தபுராண தத்துவம் வலுப்பெற்றமையினாலும் அதுவும் ஒரு சிவ வழிபாடாக வளரலாயிற்று.

முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஒரு நடனம் காவடியாட்டம். காவடி என்ற சொல் காவுதடியிலிருந்து பிறந்தது. முருகன் கோயில்கள் மலைப் பகுதிகளில், குடிமனைகளுக்கு வெகு தூரத்தில் இருந்ததால் கோயிற் பூசைகளுக்கு வேண்டிய பொருட்களையும் காணிக்கைப் பொருட்களையும் தடிகளின் இரு முனைகளிலும் கட்டித் தமது தோள்களில் வைத்து அடியார்கள் காவிச் செல்வர்.



காட்டு விலங்குகளுக்குப் பயந்து யாத்திரைகள் கூட்டமாகவே மேற்கொள்ளப்படும். யாத்திரையிற் பாடக்கூடியவர் பாடிப் பிறரை மகிழ்விப்பர். பாடலுக்கு ஆடக்கூடியவர் ஆடுவர்.

இவ்விதம் காவுதடியைத் தோளில் வைத்துக்கொண்டு ஆடப்பெற்ற ஆட்டமே காவடி ஆட்டமாக வளர்ந்தது. வெயில் மறைப்புக்குக் காவுதடியிற் கட்டப்பட்ட குழைகளின் இடத்தைக் காவடியில் முருகனது வாகனமாகிய மயிலின்



இறகுகள் எடுத்துக்கொண்டன. ஆட்டத்துடன் மேளதாளங்களும் காலப்போக்கில் இணைந்துகொண்டன.

காவுதடிகளிற் பொருட்களைக் கோயிலுக்குக் கொண்டுசெல்வது சிலருக்குத் தொழிலாக இருந்தது. சிலருக்குப் பத்தியின்பாற்பட்ட தொண்டாக இருந்தது. காணிக்கையாவும் பொருட்களைப் பலர் எடுத்துச் சென்றனர். பிற்காலத்திற் பெரும்பாலான பத்தர்கள் நேர்த்திக்கடனாகச் செய்யத் தொடங்கினர். இக்காலத்திற் காவடி எடுத்தல் நேர்த்திக் கடனோடுகூடிய வழிபாட்டு முறையாகிவிட்டது.

காவடிகள் பலவகைப்படும். பாற்செம்போடு கூடியவை பாற்காவடி என்றும் பன்னீர்ச் செம்பைக் கொண்டவை பன்னீர்க் காவடி என்றும் பெயர் பெறும். மயில் இறகுகளுக்குப் பதிலாகப் பூந்தண்டுகளால் அலங்கரிக்கப்படுபவை பூக்காவடி எனப்படும். வேற்காவடி என்பது வாய்க் கன்னங்களில் அல்லது நாக்கில் வேல் ஊசியை ஏற்றிக்கொண்டு காவடி எடுப்பது. இக் காவடி வகைகள் நடனம் ஆடியும் ஆடாமலும் எடுக்கப்படுவதுண்டு.

முதுகில் நூற்கயிறுகளோடுகூடிய கொளுக்கிகளை (செடில்களை) ஏற்றி, வண்டியில் அல்லது வாகனத்தில் முறையாக அமைக்கப்பட்ட படலில் அல்லது துலாவில் தொங்கியவாறு காவடி
எடுப்பது பறவைக் காவடி எனப்படும். பறவைக் காவடி எடுப்பவர் நடனமாடுவ தில்லை. செடில் மரத்துக்கேற்ப மேலுங் கீழுமாகத் தொங்குவது அல்லது சுழல்வதுதான் அவரது நடனமாக இருக்கும். எனினும் அவருக்கு முன்னால் காவடியாடியவாறு சிலர்
செல்வதுண்டு.

மற்றுமொருவகைக் காவடி செடிற் காவடியாகும். பறவைக் காவடிக்காரருக்குப் போலவே இக் காவடி எடுப்பவருக்கும் முதுகில் செடில்கள் குத்தப்படும். வேறுபாடு என்னவென்றால் அவர் தொங்குவார், இவர் நடப்பார். பின்னால் நின்று ஒருவர் செடில்களைப் பிடிக்க இவர் தோளிற் காவடியைத் தாங்கியவாறு நடனமாடுவர்.

தாளக் காவடி என்பது இன்னொரு வகை. தாளத்துக்கு ஆடப்படுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. இதற்குரிய இசைப் பாட்டுக் காவடிச் சிந்து எனப்படும்.

**கவிஞர் வி. கந்தவனம்**

செடிற் காவடியும் தாளக் காவடியும் ஆட்டத்துக்குரியன. காவடிக்கலையை முறையாகக் கற்றவர்களே இக் காவடிகளை எடுக்க முடியும். அண்ணாவிமார் சிறுவர்களைப் பழக்கியும் தாளக் காவடியை ஆட்டுவிப்பதுண்டு.

தமிழீழத்தில் தாளக் காவடி நன்கு வளர்ச்சிபெற்ற ஒரு சிறந்த சைவக் கலையாக - முருக வழிபாட்டுக் கலையாக விளங்குகின்றது. நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சன்னிதி ஆகிய திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு ஆண்டுதோறும் காவடிக் கலைஞர் தாளக் காவடி எடுத்து வழிபடுவது வழக்கமாகி விட்டதொன்று.




வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving



Friendly and Confidential Service
Just call Justin
416-803-7344



Brampton
Detached Home
3 Bed Rooms and Washrooms
Well Maintained Home



Justin William
Sales Representative
Tel: 416-803-7344
www: justcalljustin.com

Home Life GTA, Realty Inc.
Real Estate Broker
1711 McCowan Road, Suite #206
Scarborough, ON M1S 3Y3
Bus: 416-321-6969
Fax: 416-321-6963

This is not intended to solicit properties currently listed for sale



Markham
Markham And Steeles
3 Bed Room Link House
in a high demand markham area
close to everything




Scarborough
Morningside / Ellesmere
2 Bedroom Condominium
Low Maintenance Fee
Well Maintained Building



Scarborough
Birchmount / McNicol
3 Bedroom Condo Town House
Low Maintenance fee
Great Location

# சொல் வன்மை



மனிதர்களின் சிறப்பு அம்சம் பேச்சாற்றல். மனதில் தோன்றும் எண்ணங்களை பிறருக்கு எடுத்து உரைக்கும் ஆற்றல் மனிதர்களுக்கு உண்டு. எண்ணங்களை ஒருவருக்கு ஒருவர் கலந்துரையாடுவதால்தான் மனிதர்களின் உறவுகளே வளர்ந்தன. இந்தச் பேச்சின் சிறப்பு உறவையும் பகையையும் உண்டாக்கி விடும். எப்படி பேசிப் பழகுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் சமூகத்தில் அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். பேசுவதற்கு உண்மையும் கருப்பொருளும், நகைச்சுவையும், சாதுரியமும் வேண்டும். உங்களின் பேச்சில் அன்பு, உண்மை, பண்பு போன்றவைகள் அமையுமானால் உங்களின் சொல்வன்மைக்கு, வெற்றிக்கு இது சிறந்தவழி. மற்றவர்களைப் பற்றி குறை கூறுவதான பேச்சை தவிருங்கள். பிறருக்கு வெறுப்பு உண்டாக்காமலும், மனக்கசப்பைத் தூண்டாமலும் உங்கள் பேச்சு இருக்கட்டும். பேச்சின் சக்தி மனிதர்க்கு நன்மையை அதிகப்படுத்தும்படி அமைய வேண்டும். பொதுவாக நன்கு பேசும் திறமையை வளர்ப்பவர் வாழ்க்கையில் முன்னேற மொழிப்புலமை, கூர்ந்த மதி, தெளிவான சிந்தனை, அத்துடன் சொல்வன்மையும் வேண்டும். சுமூகமான பேச்சும், பழக்கமும், மற்றவர்க்கு நம் மீது ஒரு கவர்ச்சியை உண்டாக்கும்.

இன்றைய அரசியல் வாதிகள் மட்டுமல்ல காலஞ் சென்ற அமிர்தலிங்கம், அண்ணாத்துரை போன்றவர்களின் பேச்சால், சொல்வன்மையால் மக்கள் சமுதாயத்தை கவர்ந்தனரன்றோ! பேசும் போது நாம் கவனிக்க வேண்டியவைகள் சில!! பேச்சுமட்டுமல்ல, பேசும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நம்மை தயார்படுத்துவதாலும் மற்றவரை கவரமுடியும். எப்பொழுதும் இயற்கையாகவும், சுறுசுறுப்புடனும் பேசப்பழக வேண்டும். உரையாடும்போது கண்களை மூடிக்கொண்டோ, வேறெங்கோ பார்வையை செலுத்திக் கொண்டோ நகத்தை கடித்துக்கொண்டோ, தலையை சொறிந்து கொண்டோ பேசுவது சிலரின் பழக்கம். பொதுவாக இவை போன்ற செயல்கள் ஒருவித நரம்புத் தளர்ச்சியை உண்டாக்கி இளமையை தளரச் செய்து விடும். உங்களை அறியாமல் இப்பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு இருந்தால் திருந்திக் கொள்வது நலம். இளமை தோற்றமும் நல்ல பேச்சும் பழக்க வழக்கங்களும் நம்வெற்றிக்கு ஊக்கம் அளித்து நம்மை வெற்றி பெறச் செய்யும்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரிடமும் பொதுவான ஒரு குணம் உண்டு. வயதில் மூத்த ஒருவர் நமக்கு அறிவுரை சொல்ல வரும்போது இவர் படிக்காதவர், இவருக்கு புத்தி இருக்காது என்று அவரை ஒதுக்கி விடுவது இது உண்மைதான். ஆனால் அவரின் வயது அவருக்கு அளித்த அனுபவத்தை மறக்கிறோம். இதேபோல் வயதில் குறைந்த ஒருவர் அறிவுரை கூறவந்தாலும் இவர் படித்தவர் தான். ஆனாலும் எங்கள் அனுபவம் அவருக்கு இல்லை என்று அவரையும் ஒதுக்கி விடுவோம். இதுவும் உண்மைதான். இன்றைய நாகரிக வளர்ச்சி நாம் பெற்றதை விட அதிக அறிவை கொடுத்து இருக்கும் என்பதையும் நாம் மறந்து விடுகிறோம். அறிவுரை என்றாலே எதைப் பற்றியது என்பது தெரியாத நிலையில்கூட இது நமக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டுச் சென்று விடுபவரே ஏராளம். உலகில் எப்படி வாழ வேண்டும். வாழ்வில் எதைப் பின்பற்ற வேண்டும், ஏன் வாழவேண்டும் என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகாண குறைவான முயற்சிகளே எடுக்கப்படுகின்றன. வளர்ந்து விட்ட இன்றைய நாகரிகச் சூழ்நிலையானது மனிதன் தன்னைப் பற்றி அறிந்து கொள்ளக் கூட அவனை விடுவதில்லை. ஏன் என்ற கேள்வியே தத்துவ ஞானத்தின் திறவு கோலாய் இருக்கிறது. உலகில் மனிதர்கள் இறைவனை வணங்குவதிலும் ஏன் என்ற இந்த நிலையே இருக்கிறது. இறைவனை உணரும் சிந்தனைக் குளத்தின் நீர்மட்டத்தினை சிறிது உயர்த்த இது துணை புரியும் என்று நான் உறுதியாய் நம்புகின்றேன்.

இறைவன் என்ற ஓர் அரிய விடயத்தையும் இந்த தேவையில்லாத விடயங்களில் ஒன்றாக ஒதுக்கிவைத்து வாழ்வில் அல்லல்கள் பட்டு அதன் காரணமும் விளங்காமல் வாழ்ந்து கொண்டு இருப்பது நமக்கு பழக்கமாகி விட்டது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்றார் வள்ளுவப் பெருமான். இறைவனைப் பற்றிய மெய்ஞான கருத்துக்களும் ஞானிகளின் தத்துவ விளக்கங்களுமே நம் வாழ்வை உயர்த்தப் பயன்படுகின்றன. நீங்கள் ஒன்றைப் படிக்கும் போது, அது உங்களைப் படிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கை உயர, அவை வெறும் படிக்கட்டுகளாக இல்லாமல் உங்கள் வாழ்க்கையாகவே அதுமாற வேண்டும்.

**கந்தையா சண்முகம்**
இளைப்பாறிய அதிபர்

சரியானபடி பேசு, சாந்தமாகப் பேசு, கடும் வார்த்தைகளை உபயோகிக்காதே, வம்பு பேசாதே இவையே நமக்கு ஊக்கம் கொடுத்து நம்மை பேச்சில் வெற்றி பெற செய்யும்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது" - திருக்குறள்

**YARL WINDOW**

**BLINDS & DRAPERY**

BLINDS DRAPERIES AND SHUTTERS


- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades



FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - **905.201.7733**
**416.806.5397**
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON






December 6, 2005
Tuesday

Reception: East Comman Room 6:15 PM
Awards Ceremony: Great Hall 7:15 PM

Hart House, University of Toronto
7 Hart House Circle Toronto Ontario

416 431 4100
www.cantyd.org
info@cantyd.org

## மேலைத் தேசத்தில்
## கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




**Improted & Marketed By:**


**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# தொலைந்து போன பெஞ்சமின் மகேந்திரா




பெஞ்சமின் மகேந்திரா (பாலு மகேந்திரா) 1946 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்தார். இவர் பூனே திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, எடிட்டிங் ஆகியனவற்றில் கல்வி கற்றார். இவர் இக்கல்லூரியில் தங்கப்பதக்கம் பெற்றவராவார். 1971ஆம் ஆண்டு மலையாளத்தில் இவர் முதன்முதலாக ஒளிப்பதிவு செய்த 'நெல்லு' திரைப்படத்திற்கு இவருக்கு இந்திய தேசிய விருது கிடைத்தது. பின்னர் இவர் பல படங்களில் ஒளிப்பதிவாளராக கடமையாற்றியுள்ளார். மணிரத்தினத்தின் கன்னடப்படமான பல்லவி அனுபல்லவி கே.விஷ்வநாத்தின் சங்கராபரணம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவர் முதன்முதலாக கன்னடப்படமான கோகிலாவை இயக்கியிருந்தார். இப்படத்துக்கும் இவருக்கு தேசிய விருது கிடைத்தது. தமிழில் முதன்முதலாக 1976ஆம் ஆண்டு அழியாத கோலங்கள் என்ற படத்தை இயக்கியிருந்தார். இவரது இயக்கிய ஏனைய படங்கள்

| | |
|---|---|
| ஓலங்கள் (மலையாளம்) | 1982 |
| மூன்றாம் பிறை | 1983 |
| நீங்கள் கேட்டவை | 1984 |
| யாத்திரா (மலையாளம்) | 1985 |
| ரெட்டை வால்குருவி | 1987 |
| வீடு | 1988 |
| சந்தியாராகம் | 1989 |
| வண்ண வண்ணப் பூக்கள் | 1991 |
| மறுபடியும் | 1993 |
| சதிலீலாவதி | 1995 |
| யூலி கணபதி | 2003 |
| அது ஒரு கனாக்காலம் | 2005 |

இவற்றை விட யாத்திராவின் தமிழ்ப் பதிப்பு, 'அப்பா, அம்மா விளையாடு' போன்றவையும் வெளிவந்துள்ளன.

பாலு மகேந்திராவின் படங்கள் பொதுவாக ஒன்றான பல தன்மைகளைக் கொண்டிருக்கும்.

(1) பாலியல் ரீதியான - சமூக உளவியல் பார்வை
(அ) அறிவியல் ரீதியான பார்வை
(ஆ) சமூகரீதியான ஒழுக்கமைவுப் பார்வை.

இது சமூகத்தின் எழும் எதிர்ப்புக் குரலுக்கு எதிரான மதிப்பீடாக அமையும்.
(இ) தனிமனித உணர்வுகளும் அதன் சுதந்திரமான வெளிப்பாடும்.
(ஈ) அரசியல் ரீதியான வெளிப்பாடுகள்.

(2) மிகக் குறைந்த செலவிலான தயாரிப்பு
(3) வெளிப்புறப் படப்பிடிப்பு
(4) காட்சி ரூபமான மொழி - இலக்கியம்

குறிப்பாக எழுத்து இலக்கியத்தின் பற்றாக்குறை என பாலு மகேந்திரா இதைக் குறிப்பிடுகிறார்.

இவர் தீவிர அரசியல் படங்களை இயக்க முடியாத சூழலில் உள்ளார். இதை அவரே பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார். அப்படி அவர் எடுத்திருந்தால் அவர் இந்தியாவில் இருக்க முடியாது.

இவரது அண்மையில் வெளியான படமான 'அது ஒரு கனாக் காலம்' இவரது பல கருத்துக்களை கொண்டு வெளிவந்துள்ளது. இவரது யாத்திரா (பயணம்) மலையாளப் படத்தின் ஒரு மறுபதிப்பே இது எனலாம். அங்கே வாலிபன், யுவதி. இங்கே 20வயது இளைஞன், பெண். இப்படத்தில் கொலைக்கான காரணம் ஒரு தன் இனச் சேர்க்கைக்கான முயற்சி. இது கூட பாலு மகேந்திராவின் பாலியல் ரீதியான பார்வையே. மரபு ரீதியான பாலியல் பார்வையை இவர் ஆதரிப்பதாகவே காட்டிக் கொள்கின்றார்.

வியாபார ரீதியான சினிமாவில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக பல இடங்களில் சமரசம் செய்து கொள்கிறார். தனுஷ், ப்ரியாமணி நடிக்கும் காட்சிகள் கவித்துவமானவை. ஆனால் காட்சிப் படிமங்கள் காட்டப்பட்டுள்ள முறை மற்றும் தே. நா சிறியின் காட்சிகள்...



தனுஷ் ஒரு பலமிக்க கதாநாயகனாக காட்டும் முயற்சி. சிறைக்சாலையில் தனுஷ் அதிகாரியுடன் போடும் சண்டை ஒரு வியாபார முயற்சியே. சிறைச்சாலைக் காட்சிகள் ஓரளவு விரிவானவையே. எங்கோ தொட்டு, எங்கோ சென்று எங்கோ முடிந்தது போன்றிருந்தது.

இறுதிக் காட்சி நம்ப முடியாமல் இருந்தது. சிறைசாலையிலிருந்து தப்பும் ஒருவனை தப்பச் செய்வது....... எப்படியாயினும் அவர் மீதான தேடல் தொடரும். ஒரு நாள் அவர் பிடிபடலாம்.

M.G.R காலத்து முடிவை M.G.R, ரசிகர்கள் மீது வைப்பது போல் இதுவும் தனுஷ் ரசிகர்களுக்கான முடிவு. சூப்பர் ஸ்ராரின் மருமகன் தனுஷ் மீறமுடியுமா?

தனுஷ், ப்ரியாமணி ஆகியோரின் நடிப்பு சிறப்பாகவுள்ளது. ஒளிப்பதிவாளரே எடிட் செய்வதில் உள்ள சிக்கல்களை இப்படம் பார்ப்பவர்கள் தெளிவாக பார்க்கலாம். எங்கே பாலு மகேந்திரா? தொலைந்து போய்விட்டாரா? தொலைக்கப்பட்டு விட்டாரா?

பிற்குறிப்பு - இவர் தான் திரைப்படத்துறையிலிருந்து ஓய்வு பெறமுன் இலங்கை இனப்பிரச்சினை பற்றிய படம் ஒன்றை எடுக்க இருப்பதாக அண்மையில் பேட் டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் **Accident & Traffic Ticket**

(16 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



எம் விடியலுக்காய் வித்தான கல்லறைக் கடவுள்களை கைதொழுது
மாவீரர் நினைவாக கனடா செஞ்சோலை அறிவுச்சோலை நடத்தும்

## மாவீரர் நாள் நினைவுப்போட்டி - 2005

### கலை நிகழ்வுகளுடன் கூடிய இறுதிப்போட்டி

- கலை நிகழ்வுகள் : நடனம், நாடகம், பாட்டு, நகைச்சுவை இன்னும் பல...
- இறுதிப் போட்டிகள்: பேச்சு, பொது அறிவு
- அனைத்துப் போட்டிகளுக்குமான பரிசளிப்பு

**இடம்: கனடா கந்தசுவாமி கோவில் 733 Birchmount Rd.**

**காலம்: நவம்பர் 19, 2005, சனிக்கிழமை நேரம்: மாலை 5:00மணி**

## பிரவேசம் இலவசம்

**மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் கனடா செஞ்சோலை அறிவுச் சோலை தொலைபேசி - 416.294.1893 647.201.5993**

திரண்டு வாரீர் திரண்டு வாரீர் திரண்டு வாரீர்

# தமிழ் சமூகத்தில் வன்முறையைத் தகர்க்க வழிசமைப்போம்

முதியவர்களும் பெண்களும் சிறுவர்களும் ஆண்களும் இளைஞர்களும் உள்ளடங்கிய தமிழ்ச் சமூகம் சுதந்திரமாக பயமின்றி வன்முறையற்ற சூழலில் வாழ உரிமையுடையவர்கள் என்ற வகையில் வன்முறையற்ற தமிழ் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக வசந்தம் உளவளத் துணை நிலையம் தனது வருடாந்தக் கருத்தரங்கின் வரிசையில் ஐந்தாம் வருடமாக 2005ம் ஆண்டிற்கான கருத்தரங்கு தமிழ் சமூகத்தில் வன்முறையைத் தகர்க்க வுழிசமைப்போம் எனும் மையப்பொருளில் இலக்கம் 150 பரோ வீதி (Burough Drive) ஸ்காபரோ சிவிக் நிலைத்தில் நொவெம்பர் 19ம் திகதி மு. ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 மணி-வரை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது: இக்கருத்தரங்கு காலை மாலை அமர்வுகளாக நடைபெற உள்ளது. கருத்தரங்கில் பின்வரும் 5 பிரதான தலைப்புக்களில் துறைசார் நிபுணர்கள் உரையாற்ற உள்ளனர்.

கனடாவில் குடிவரவுப்பெண்களின் அவலத்தை - அஞ்சலா றொபேட்சன் (இயக்குநர், சிஸ்ரரிங்),

வன்முறையாலும் போதைக்கும் அடிமையாதலாலும் குடும்பத்தில் ஏற்படும் உளத்தாக்கம் வைத்திய கலாநிதி சூரியபாலன் (உளநல மருத்துவர், சென்ரிநெறி வைத்தியசாலை "வழியைக்காட்டுங்கள் - நான் தீர்மானிக்கின்றேன்" - மாகிறற் பிளவர் மூப்பியல் உளவியல் மருத்துவ செயற்திட்ட சிகிச்சை நிலைய இணைப்பாளர், வீட்டு வன்முறையால் சிறுவர்களுக்கு ஏற்படும் உளத்தாக்கமும் ஆதரிப்பு பெற்றோர் ஆகுதலும் - நித்தி செல்லப்பு - (ரொரன்ரோ சிறுவர் உதவிச் சங்கம் (CAS) என்பவற்றுடன் ரொறன்ரோ வாழ் தமிழ் சமூகத்தில் நெருங்கிய துணையினால் ஏற்படும் வன்முறை பற்றிய அபிப்பிராயம் பற்றிய ஆய்வை பெண்களுக்கான சுகாதார நலன் ஆய்வு நிலையத்திற்காக மேற்கொண்ட கலாநிதி றொப-ின் மேசனும் கலாநிதி ஜலீன் கேமனும் இணைந்து தமிழ் சமூகத்தில் நெருங்கிய துணையினால் ஏற்படும் துன்பியல் எனும் விடயத்திலும் உரையாற்ற உள்ளார்கள்.

மாலை அமர்வில் கருத்துக்குவியம், கருத்தொருமுனைப்படுத்தல், வீட்டு வன்முறையும் முதியோர் துஸ்பிரயோகமும், இளைஞர் வன்முறை உட்பட சிறுவர் மீதான வன்முறை எனும் தலைப்புக்களில் துறைசார்ந்தோரினால் வழிப்படுத்தப்படும்.

நீங்களும் பங்கு பற்றி உங்கள் சந்தேகங்களைத் தீர்த்து வன்முறையற்ற தமிழ் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வழிசமையுங்கள். இந்நிகழ்வில் பங்குபற்றுபவர்களின் வசதியினைக் கருத்தில் கொண்டு பின்வரும் மையங்களில் இருந்து குறிப்பிட்ட நேரங்களில் பேரூந்துகள் புறப்பட ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. உங்கள் பதிவுகளுக்கு 416 324 4185 எனும் இலக்க தொலைபேசியினுடாக உங்களின் பெயர், தொலைபேசி இலக்கத்தைத் தெளிவாகப் பதிவு செய்யவும். இந்நிகழ்விற்காக போக்குவரத்துவசதிகள் குறைந்க செலவுடன் ($3) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிசசாக்கா - முதுதமிழர் மன்றம் (Mississauga-Senior Tamil Society of Peel) 3085 கொரன்ராறியோ வீதி, டிறிவ்வூட் சமூகமையம் (யேன் & ஃபிஞ்) Drift Wood Community Center (Jane/Finch), ஸ்லிங்ரன் இல. 02 றவுண்றி வீதி Islington Rountry Road, பிறைற்றல் ரவுண் சேக்கில் Brital Town Circle, மார்க்கம் வில்கிலே பொதுப் பாடசாலை (Wilclay Public school ), மாக்கம் கைகிளன் மக்டொனால்ஸ்க்கு அருகாமையில் Markham-Highglen (McDonnals), 50 ரக்சிடோகோற் (50 Tuxedo court) கிறீன் கிறசன்ற் 65 Green Crest, மெல்வேண் மோல் செல்லேஸ்ஸிற்கு முன்பாக (Malvern Mall in front of Zellers) மோணிங்சைட் மோல் ஸ்ரோபுரன்ற் (Morningside Mall (Storefront) மார்க்கம் - எக்கிளின்ரன் சந்திப்பு (Markham & Eglington Intersection - டொமினியன் முன்பாக, 20 வேட் அவனியு (லான்ஸ் டவுண்) தமிழ் கூட்டுறவு கட்டிடம் Wade Avenue Landsdown Tamil Cooperative building 240 வெலஸ்லி வீதி (240 Wellesley St) கெனடி எக்கிளின்ரன் சந்திப்பு Kennedy &Eglington இவ்விடங்களில் இருந்து காலை 8.30 மணிக்கு பேரூந்து புறப்படும்.

அத்துடன் இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பராமரிப்பு வசதியும் அதே இடத்தில் வழங்கபட உள்ளது. இவ்வசதிகளைச் சிறந்தமுறையில் வழங்கவும் இறுதி நேர நெருக்கடிகளைத் தவிர்க்கவும் பேரூந்து வசதி குழந்தைபராமரிப்பு வசதி தேவைப்படுவோர் முற்கூட்டியே பதிவு செய்வது மிக மிக அவசிமென பணிவுடன் அறிவுறுத்தபடுகின்றீர்கள். நிகழ்விற்கான நுழைவுக்கட்டணம் $5 அறவிடப்படுவதுடன் நிகழ்வின் போது மதியஉணவு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பகளுக்கும் பதிவுகளுக்கும் தயவுடன்
வசந்தம் (416) 324 4185
வைத்திய கலாநிதி திலகவதி சந்துலால்
(416) 413 9431

# உலகில் மிகவும் சக்தி வாய்ந்த

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இந்த நூறு பெண்களுக்குள் சோனியா காந்தி, ஜெயலலிதா போன்ற எந்த ஒரு இந்திய பெண் கூட வரவில்லை என்பதும் குறிப்பிடக்கூடிய விடயம்.

இந்த நூறு பெண்களுக்குள் வந்த ஒரே ஒரு கனடிய பெண்மணி ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவி பொது செயலாளராக இருக்கும் Louise Frechette ஆவர். இதைவிட இங்கு குறிப்பிடக்கூடிய விடயம் ஒன்று இந்த நூறு மிகவும் சக்திவாய்ந்த பெண்களில் அறுபத் ஆறு பெண்கள் அமெரிக்கர்க அமெரிக்கர்களுக்கு அடுத்ததாக இங்கிலாந் சேர்ந்த நான்கு பெண்களும் பிரான்ஸ் நாட் சேர்ந்த நான்கு பெண்களும் அடங்குவார்க இவற்றுள் சீனப் பெண்கள் மூவர் உள்ள இலங்கை, பங்களாதேஷ், பிலிப்பைன் சிங்கப்பூர் மற்றும் கனடா உட்பட இருப மூன்று நாடுகளில் இருந்து ஒவ்வொரு பெ இந்த உலகில் மிகவும் சக்திவாய்ந்த மு நூறு பெண்களிற்குள் தெரிவாகி உள்ளனர்.

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL



Fork Lift licence From $75.00

Truck licence A-Z From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618/416.913.9574
416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

DELTA MIXER GRINDER
ஒவ்வொரு சமையலறைக்கும் அத்தியாவசியமானது




+ 110 V, 550 W Power
+ 3 Pcs Stainless Steel Jar
+ 1 Year Warranty
+ 4 Interchangeable Blac

(416) 294 - 5024
Wholesaler / Distributorship Enquires Welcom

Weekend Special Discount Coopan
save $ 20.00 on purchace of delta mixer grinder
(Limit one coupan per purcharce)
offer end soon and not combaind with any other offer

Weekend Special Discount Co
save $ 20.00 on purchace of delta mixer gri
(Limit one coupan per purcharce)
offer end soon and not combaind with any oth